

Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



We submit our efforts at the Lotus feet of Jagadguru Śankarācārya His Holiness Mahāsannidhānam Śrī Śrī Srī Bhāratī Tīrtha Mahāswāmiji and Jagadguru Śankarācārya His Holiness Sannidhānam Śrī Śrī Śrī Vidhuśekhara Bhāratī Mahāswāmiji

स्वर्ण भारती

ஸ்வர்ண பா4ரதீ

ஶ்ரீ சங்கர க்ருபா

பாகம் 1

வரிசை எண் 12

We submit our efforts at the Lotus feet of Jagadguru Śankarācārya His Holiness Mahāsannidhānam Śrī Śrī Srī Bhāratī Tīrtha Mahāswāmiji and Jagadguru Śankarācārya His Holiness Sannidhānam Śrī Śrī Śrī Vidhuśekhara Bhāratī Mahāswāmiji

முதல் பாகம்

श्री श्री जगद्गुरु शङ्कराचार्य महासंस्थानम्,
दक्षिणाम्नाय श्रीशारदापीठम्, शृङ्गेरी
Sri Sri Jagadguru Shankaracharya Mahasamsthanam
Dakshinamnaya Sri Sharada Peetham, Sringeri - 577 139.

शृङ्गगिरिः १३.४.२०२४

दक्षिणाम्नायशृङ्गेरीशारदापीठाधीश्वराणाम् अनन्तश्रीविभूषितानां परमपूज्यानां जगद्गुरु शङ्कराचार्याणां श्रीभारतीतीर्थमहास्वामिनां संन्याश्रमस्वीकारस्वर्णमहोत्सवसन्दर्भं पुरस्कृत्य मुद्रितचराणां अधुना दुर्लभंगतानां विशिष्टानां गैर्वाणीग्रन्थाणां अन्तर्जालमाध्यमेन पुनः प्रकाशनं क्रियत इति विदित्वा जगद्गुरुचरणाः नितराममोदन्त । श्रीशारदाचन्द्रमौलीश्वरयोरसीमया कृपया कार्यमिदं सुष्ठु प्रवर्तताम्, कार्येऽस्मिन् कृतसाह्यास्समेऽपि सज्जनाः श्रेयांसि समधिगच्छन्त्विति च श्रीजगद्गुरुचरणा आशासते ।

इति निवेदयिता
टि दक्षिणामूर्तिः

Phone: 08265 - 250123 / 250192 • Fax: 08265 - 250792
E-mail: info@sringerisharadapeetham.org • www.sringerisharadapeetham.org

முதல் பாகம்

ஜகத்குரு சங்கராசாரியர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் மற்றும் ஜகத்குரு சங்கராசாரியர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகளின் பொற்பாதங்களில் எங்களின் முயற்சியை சமர்ப்பிக்கிறோம்.

"ஸ்ரீ சங்கர க்ருபா" என்ற பத்திரிகை 1959ஆம் ஆண்டு 10ஆம் தேதி 7 ஆவது மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட மிகவும் பெற்ற தமிழ் மாத இதழ். ஜகத்குரு சங்கராச்சாரியார் ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளாசியுடன் இந்த மாதாந்திர பத்திரிகை துடங்கப்பட்டது. பூஜ்யஸ்ரீ ஓம்காரானந்தர், ஸ்தாபகர் ஸ்ரீ சித்பவானந்த ஆஸ்ரமம், தேனி அவர்களின் ஆசியுடன், பூஜ்யஸ்ரீ ஸ்வாமி குருபராநந்தர், ஸ்தாபகர் பூர்ணாலயா, சென்னை மற்றும் Mentor ஸ்ரீ சித்பவானந்த ஆஸ்ரமம், தேனி மற்றும் பூஜ்யஸ்ரீ ஸ்வாமி சமானந்தர், தலைவர், தேனி, அவர்களால் இங்கு நமக்கு இந்த அறிய பத்திரிகைகளின் தொகுப்புகள் வழங்கப்பட்டுள்ளது. பூஜ்யஸ்ரீ ஸ்வாமி குருபராநந்தர் மற்றும் பூஜ்யஸ்ரீ ஸ்வாமி சமானந்தர் அவர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றிகள் . ஸ்ரீ சங்கர க்ருபா மாத இதழில் வெளிவந்த கட்டுரைகளை முடிந்த வரை தொகுத்து பாகங்களாக கொண்டு வர முயற்சிக்கிறோம்.

இப்படிக்கு,
ஸ்ரீமதி வீரமணி.

முதல் பாகம்

॥श्रीगुरुवन्दनम्॥

श्रीगुरुभ्यो नमः

शङ्कारूपेण मच्चित्तं पङ्कीकृतमभूद्यया ।
किङ्करी यस्य सा माया शङ्कराचार्यमाश्रये ॥
प्रह्लादवरदो देवो यो नृसिंहः परो हरिः ।
नृसिंहोपासकं नित्यं तं नृसिंहगुरुं भजे ॥
श्रीसच्चिदानन्दशिवाभिनव्यनृसिंहभारत्यभिधान् यतीन्द्रान् ।
विद्यानिधीन् मन्त्रनिधीन् सदात्मनिष्ठान् भजे मानवशम्भुरूपान् ॥
सदात्मध्याननिरतं विषयेभ्यः पराङ्मुखम् ।
नौमि शास्त्रेषु निष्णातं चन्द्रशेखरभारतीम् ॥
विवेकिनं महाप्रज्ञं धैर्यौदार्यक्षमानिधिम् ।
सदाभिनवपूर्वं तं विद्यातीर्थगुरुं भजे ॥
अज्ञानां जाह्नवीतीर्थं विद्यातीर्थं विवेकिनाम् ।
सर्वेषां सुखदं तीर्थं भारतीतीर्थमाश्रये ॥
विद्याविनयसम्पन्नं वीतरागं विवेकिनम् ।
वन्दे वेदान्ततत्त्वज्ञं विधुशेखरभारतीम् ॥
पञ्चाशल्लिपिभिर्विभक्तमुखदोः पन्मध्यवक्षस्थलां
भास्वन्मौलिनिबद्धचन्द्रशकलामापीनतुङ्गस्तनीम् ।
मुद्रामक्षगुणं सुधाढ्यकलशं
विद्याञ्च हस्ताम्बुजैः
बिभ्राणां विशदप्रभां त्रिनयनां वाग्देवतामाश्रये ॥

श्रीमत्परमहंस-परिव्राजकाचार्यवर्य-पदवाक्यप्रमाणपारावारपारीण-यमनियमासनप्राणायामप्रत्याहारधारणाध्यानसमाध्यष्टाङ्गयोगानुष्ठाननिष्ठ-तपश्चक्रवर्ति-अनाद्यविच्छिन्नश्रीशङ्कराचार्यगुरुपरंपराप्राप्त-षड्दर्शनस्थापनाचार्य-व्याख्यानसिंहासनाधीश्वर-सकलनिगमागमसारहृदय-सांख्यत्रयप्रतिपादक-वैदिकमार्गप्रवर्तक-सर्वतन्त्रस्वतन्त्र-आदिराजधानी-विद्यानगरमहाराजधानी-कर्णाटकसिंहासनप्रतिष्ठापनाचार्य-श्रीमद्राजाधिराजगुरु-भूमण्डलाचार्य-ऋष्यशृङ्गपुरवराधीश्वर-तुङ्गभद्रातीरवासि-श्रीमद्विद्याशङ्करपादपद्माराधक-

श्रीमज्जगद्गुरु-श्रीमदभिनवविद्यातीर्थमहास्वामिगुरुकरकमलसञ्जात-

श्रीमज्जगद्गुरु-श्रीभारतीतीर्थमहास्वामिनां-

तत्करकमलसञ्जात-श्रीमज्जगद्गुरु-श्रीविधुशेखरभारतीमहास्वामिनां च चरणारविन्दयोः साष्टाङ्गप्रणामान् समर्पयामः ॥

முதல் பாகம்

||ஶ்ரீகு³ருவந்த³னம்||
ஶ்ரீகு³ருப்⁴யோ நம꞉
ஶங்காரூபேண மச்சித்தம்' பங்கீக்ரு'தமபூ⁴த்³யயா |
கிங்கரீ யஸ்ய ஸா மாயா ஶங்காராசார்யமாஶ்ரயே ||
ப்ரஹ்லாத³வரதோ³ தே³வோ யோ ந்ரு'ஸிம்'ஹ꞉ பரோ ஹரி꞉ |
ந்ரு'ஸிம்'ஹோபாஸகம்' நித்யம்' தம்' ந்ரு'ஸிம்'ஹகு³ரும்' ப⁴ஜே ||
ஶ்ரீஸச்சிதா³னந்த³ஶிவாபி⁴நவ்யந்ரு'ஸிம்'ஹபா⁴ரத்யபி⁴தா⁴ன் யதீந்த்³ரான் |
வித்³யாநிதீ⁴ன் மந்த்ரநிதீ⁴ன் ஸதா³த்மநிஷ்டா²ன் ப⁴ஜே மானவஶம்பு⁴ரூபான் ||
ஸதா³த்மத்⁴யானநிரதம்' விஷயேப்⁴ய꞉ பராங்முக²ம் |
நௌமி ஶாஸ்த்ரேஷு நிஷ்ணாதம்' சந்த்³ரஶேக²ரபா⁴ரதீம் ||
விவேகினம்' மஹாப்ரஜ்ஞம்' தை⁴ர்யௌதா³ர்யக்ஷமாநிதி⁴ம் |
ஸதா³பி⁴னவபூர்வம்' தம்' வித்³யாதீர்த²கு³ரும்' ப⁴ஜே ||
அஜ்ஞானாம்' ஜாஹ்னவீதீர்த²ம்' வித்³யாதீர்த²ம்' விவேகினாம் |
ஸர்வேஷாம்' ஸுக²த³ம்' தீர்த²ம்' பா⁴ரதீதீர்த²மாஶ்ரயே ||
வித்³யாவினயஸம்பன்னம்' வீதராக³ம்' விவேகினம் |
வந்தே³ வேதா³ந்ததத்த்வஜ்ஞம்' விது⁴ஶேக²ரபா⁴ரதீம் ||
பஞ்சாஶல்லிபிபி⁴ர்விப⁴க்தமுக²தோ³꞉ பன்மத்⁴யவக்ஷஸ்த²லாம்'
பா⁴ஸ்வன்மௌலிநிப³த்³த⁴சந்த்³ரஶகலாமாபீனதுங்க³ஸ்தனீம் |
முத்³ராமக்ஷகு³ணம்' ஸுதா⁴ட்⁴யகலஶம்'
வித்³யாஞ்ச ஹஸ்தாம்பு³ஜை꞉
பி³ப்⁴ராணாம்' விஶத³ப்ரபா⁴ம்' த்ரிநயனாம்' வாக்³தே³வதாமாஶ்ரயே ||

ஶ்ரீமத்பரமஹம்'ஸ-பரிவ்ராஜகாசார்யவர்ய-பத³வாக்யப்ரமாணபாராவாரபாரீண-யமநியமாஸனப்ராணாயாமப்ரத்யாஹாரதா⁴ரணாத்⁴யானஸமாத்⁴யஷ்டாங்க³யோகா³னுஷ்டா²னநிஷ்ட²-தபஶ்சக்ரவர்தி-அநாத்³யவிச்சி²ன்னஶ்ரீஶங்கராசார்யகு³ருபரம்பராப்ராப்த-ஷட்³த³ர்ஶனஸ்தா²பனாசார்ய-வ்யாக்²யானஸிம்'ஹாஸனாதீ⁴ஶ்வர-ஸகலநிக³மாக³மஸாரஹ்ரு'த³ய-ஸாங்க்²யத்ரயப்ரதிபாத³க-வைதி³கமார்க³ப்ரவர்தக-ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர-ஆதி³ராஜதா⁴னீ-வித்³யாநக³ரமஹாராஜதா⁴னீ-கர்ணாடகஸிம்'ஹாஸனப்ரதிஷ்டா²பனாசார்ய-ஶ்ரீமத்³ராஜாதி⁴ராஜகு³ரு-பூ⁴மண்ட³லாசார்ய-ரு'ஷ்யஶ்ரு'ங்க³புரவராதீ⁴ஶ்வர-துங்க³ப⁴த்³ராதீரவாஸி-ஶ்ரீமத்³வித்³யாஶங்கரபாத³பத்³மாராத⁴க-ஶ்ரீமஜ்ஜக³த்³கு³ரு-ஶ்ரீமத³பி⁴னவவித்³யாதீர்த²மஹாஸ்வாமிகு³ருகரகமலஸஞ்ஜாத-ஶ்ரீமஜ்ஜக³த்³கு³ரு-ஶ்ரீபா⁴ரதீதீர்த²மஹாஸ்வாமினாம்'-தத்கரகமலஸஞ்ஜாத-ஶ்ரீமஜ்ஜக³த்³கு³ரு-ஶ்ரீவிது⁴ஶேக²ரபா⁴ரதீமஹாஸ்வாமினாம்' ச சரணாரவிந்த³யோ꞉ ஸாஷ்டாங்க³ப்ரணாமான் ஸமர்பயாம꞉ ||

முதல் பாகம்

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्येत्यादिसकलबिरुदालंकृतैः श्रीशृङ्गेरी श्रीजगद्गुरु श्रीमदभिनवविद्यातीर्थस्वामिपादैः अनुगृहीतः

आशीस्सन्देशः ॥

श्रीशंकरसेवासमितिविषये विरचिता नारायणस्मरणपूर्वकाशिषः समुल्लसन्तु ॥

सुखदुःखयोः साधने धर्माधर्मौ। तयोरनुष्ठानपरिहारौ तदवगतिनिबन्धनौ । अवगतिसामान्ये च प्रत्यक्षादिप्रमाणानां प्रवृत्तावपि धर्माधर्मावगतौ तेषां न प्रवृत्ति । किं तु शब्दस्यैव । स च शब्दः वेदरूपः । तस्मिन् श्रद्धाभूमोदयः सकलस्य श्रेयसो निदानं भवति । कालचक्रपरिवर्तनक्रमेण श्रद्धायां हीयमानायां अधर्मे च वर्धमाने कैलासकृतवासः श्रीशंकरः मानुषीं तनुमास्थाय लोकानां भ्रमप्रमादादिभिः उद्भूतां अश्रद्धां निरस्य वैदिकं मतं प्रातिष्ठिपत् । तच्च मतं तदीयाभिः सूक्तिभिः, तदनुसारिणां धार्मिकवरेण्यानां अध्यात्मनिष्ठानां सुनीनां च वचनैरेवावगन्तव्यम् । तेषां सर्वत्र निराबाधं प्रसाराय श्रीशंकर सेवासमितिः "शंकरकृपा" इति नाम्ना कांचित् मासपत्रिकां प्रकाशयतीति विज्ञाय नितरां मोदामहे। आशास्महे च शंकरकृपा चिरमभिवर्धतामिति ॥

निवेशस्थान काट्द्रुपुत्तरु,
दिवस १०-७-५९ — विद्यातीर्थः




முதல் பாகம்

ஸ்ரீ சிருங்கேரி ஸ்ரீ ஜகத்குரு ஆசார்ய ஸ்வாமிகளின் ஆசிமொழி

தர்மத்தால் இன்பமும் அதர்மத்தால் துன்பமும் ஏற்படுகிறது. தர்மத்தைச் செய்யவும், அதர்மத்தை விலக்கவும் அவ்விரண்டின் ஸ்வரூபத்தையும் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். ஸாதாரணமாக எல்லாவற்றையும் அறிந்து கொள்ள உபயோகப்படும் பிரத்யக்ஷம் முதலான பிரமாணங்களால் தர்மா தர்மங்களை அறிய முடியாது. சப்தம் ஒன்றால்தான் அவைகளை அறிந்துகொள்ளக் கூடும். அந்த சப்தமென்பது வேதமே. அதில் கூறியவற்றில் சிரத்தை அதிகரிக்குமேயானால் எல்லா சிரேயஸ்ஸுகளையும் அடையலாம். காலசக்ரம் சுழன்று வரும் வேகத்தில் முறையே சிரத்தை குறைந்து அதர்மம் வளர்ச்சியடைந்த பொழுது கைலாஸ வாஸியான ஸ்ரீ சங்கரர் மனித உருவில் தோன்றி அறிவு மயக்கம், கவனக் குறைவு முதலியவைகளால் ஜனங்களுக்கு உண்டாகும் அசிரத்தையைப் போக்கி வைதிக மதத்தை நிலைநிறுத்தினார். அவருடைய ஸூக்திகளாலும், அதை அநுஸரித்த தார்மிக சிரேஷ்டர்களும் ஆத்ம விஷயத்திலேயே நிலைத்து நின்றவர்களுமான முனிவர்களின் சொற்களாலும்தான் வைதிக மதத்தை அறிந்துகொள்ள முடியும். அந்த ஸூக்திகளைத் தங்குதடையன்னியில் யாவரும் எங்கும் புரிந்து கொள்வதற்காக ஸ்ரீ சங்கர ஸேவா சமிதி, 'ஸ்ரீ சங்கர க்ருபா ' என்னும் பெயரில் ஓர் மாதப் பத்ரிகையைப் பிரசுரிக்கிறது என்று அறிந்து மிக்கவும் ஆனந்த மடைகிறோம். சங்கர கிருபை எப்பொழுதும் வளர்ந்து ஓங்கட்டும் என ஆசீர்வதிக்கிறோம்.

முகாம்:- காட்டுபுத்தூர். 10-7-59. அபிநவ வித்யாதீர்த்தர்.

முதல் பாகம்

நெ	விஷயம்	பக்கம்
1	**புருஷார்த்த நிர்ணயம்** (ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹபாரதீ ஸ்வாமிகள்)	8
2	**குருவின் மஹிமை** (பிராந்தியங்கரை பண்டிதராஜ , ப்ரஹ்மஸ்ரீ S. ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள், மதராஸ்)	20
3	**கடல் கடந்த ஸனாதன தர்மம்** (ஆசிரியர் ஸ்ரீ சங்கர க்ருபா ஸ்ரீ K R வெங்கடராமன்)	24

ஸ்ரீ குருப்யோ நம:

புருஷார்த்த நிர்ணயம்.

(ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹபாரதீ ஸ்வாமிகள்)

'புருஷார்த்தம்' என்னும் சொல்லிற்கு 'மானிடர்களால் விரும்பத்தகுந்தவை' என்னும் பொருள் எல்லோருக்கும் தெரியுமாகையால் புருஷார்த்தம் எது என்பதை மட்டும் இங்கு விசாரிப்போம்.

'एतत्त्रयं जगति पुण्यकृतो लभन्ते'

'ஏதத்த்ரயம்' ஜக³தி புண்யக்ரு'தோ லப⁴ந்தே'

(உலகில் தனக்கு அநுகூலமான புத்திரன், அநுகூலமான மனைவி, உண்மையான சிநேகிதன் இவர்களை அடைய முற்பிறவிகளில் மிகுந்த புண்யம் செய்திருக்க வேண்டும்) எனப் பெரியோர்கள் கூறியிருப்பதால் புண்யத்தால் கிடைக்கும் இவைகளையே புருஷார்த்தமாக எண்ணலாமோ வெனில், அது சரியல்ல. நீரில் உண்டான போதிலும் குமிழ், அலை, நுரை, தாமரை இவைகள் நாம்

முதல் பாகம்

பார்க்கும்பொழுதே மறைந்து போவதுபோல் புத்திர மித்திர களத்ராதிகள் அழிந்துபோவதை நாம் கண்ணால் பார்ப்பதால் புண்யத்தால் கிடைப்பதைக்கொண்டு அதை எப்படி புருஷார்த்த மெனக் கூறமுடியும்? ஆகையால் இவை புருஷார்த்தமல்ல. தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நான்கே புருஷார்த்தங்கள்.

இந்நான்கில் தர்மம் என்றால், வேதங்களில் நித்யம் நைமித்திகம், காம்யம் என்று பலவித கர்மாக்கள் அந்தந்த பலன்களைக் கொடுப்பதாக கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் இக்கர்மாக்கள் செய்து முடிந்ததும் அழிந்துவிடுகின்றன. உதாஹரணமாக யாகமென்பது அக்னியில் தேவதையை உத்தேசித்து ஹவிஸ்ஸைப் போடுவது. கங்கா ஸ்னான மென்பது கங்கை நீரில் மூழ்குவது. சிவபூஜை என்ப சிவலிங்கத்தில் புஷ்பம், பால் முதலியதை ஸமர்ப்பணம் செய்வது. இப்புண்ய கர்மாக்களுக்கு கர்மா செய்து முடிந்ததும் உடன் பலன் கிடைப்பதில்லை. பிற்காலத்திலோ மறுபிறவியிலோ தான் பலன் கிடைக்கப்போகிறது. கர்மா உடனே அழிந்துபோவதால் அதுவரை இருப்பதில்லை சாஸ்திரமோ கர்மா பலனைக் கொடுக்குமென்று கூறுகிறது. ஆதலால் கர்மாக்கள், பலனைக் கொடுக்கும் திறமையுள்ள அதிருஷ்டத்தை இவன் மனத்தில் உண்டுபண்ணின பிறக அழிந்துபோவதாகவும் அந்த அதிருஷ்டம் வெகுகாலம் இருந்து பலனைக் கொடுத்த பிறகே அழிந்தபோவதாகவும் சொல்லவேண்டும். இந்த அதிருஷ்டம்தான் தர்மமென்பது

அர்த்தமென்றால் பணமும் பொருளுமாம். இவை வேறு வழியில் செலவழிக்கப்படாமல் மேற்கூறிய தர்மத்திற்கு ஸாதனமான கர்மாக்களில் செலவழிக்கப்பட்டால் தர்மமூலமாய் அவைகளும் புருஷார்த்தமெனப்படும்.

காமமென்பது 'எனக்கு தர்மம் கிடைக்கவேண்டும்' என்னும் விருப்பம். இது இவனை தர்ம ஸாதனமான முற்கூறிய கர்மாக்களைச் செய்யத் தூண்டுகிறது.

முதல் பாகம்

கெட்ட செய்கையைத் தூண்டும் ஆசைக்கும் காமமென்ற பெயர் இருந்தபோதிலும் அது புருஷார்த்தமாகாது. அது தீமையையே கொடுக்கும். பகவத் கீதையில்,

'धर्माविरुद्धो भूतेषु कामोऽस्मि भरतर्षभ'

'த⁴ர்மாவிருத்³தோ⁴ பூ⁴தேஷு காமோ(அ)ஸ்மி ப⁴ரதர்ஷப⁴'

(பிராணிகளிடம் தர்மத்திற்கு விரோதமில்லாத காமம் நானே) என்று இதே அபிப்பிராயத்தைக் கூறுகிறார்.

மோக்ஷமென்பது விடுதலை. அது தன் உண்மை நிலைமையை அறிந்தால்தான் ஏற்படும். அதைப்பற்றி பின்னர் கூறுவோம்.

இந்நான்கு புருஷார்த்தங்களில் எது உயர்ந்தது என்பதை விசாரிப்போம். இந் நான்குமே புருஷார்த்த மெனக் கூறப்படுவதால் எல்லாம் ஸமம்தான், ஒன்றுக் கொன்று வித்யாஸம் இல்லையென்று சொல்வதற்கில்லை. மனுஷ்யன் என்ற பெயர் எல்லாருக்கும் பொதுவாக இருந்த போதிலும் எல்லாரும் ஒரே மாதிரியாக இல்லை. ஒருவன் யஜமானன், மற்றொருவன் வேலைக்காரன். ஒருவனுக்கு ஸுகம், மற்றவனுக்கு துக்கம். இம்மாதிரி எண்ணற்ற வேற்றுமைகள் காணப்படுகின்றன. அதுபோலவே நான்கும் புருஷார்த்தமாய் இருந்தபோதிலும் அவைகளில் உயர்வு தாழ்வு இருக்க வேண்டுமென்றே ஏற்படுகிறது. ஆகையால் எது உயர்ந்தது என்று விசாரிக்க வேண்டியது அவசியம் தான்.

இந்நான்கில் அர்த்தமும் காமமும் சிறந்ததாகாது. அதுமட்டுமல்ல. இவை தர்மத்தை உண்டுபண்ணி அதன் மூலமாகத்தான் புருஷார்த்தமாகவேண்டும். நேரிடையாக இவை புருஷார்த்தமாகா. தர்மமென்ற புருஷார்த்தத்திற்கு இவை ஸாதனங்களே. இதுபோலவே தர்மமும் ஸ்வர்க்கம் முதலான புருஷார்த்தத்திற்கு ஸாதனமாயிருப்பதால் நேரிடையான புருஷார்த்தமாகாது. வேதத்தில் ஜ்யோதிஷ்டோமம் முதலான யாகம் ஸ்வர்க்க ஸாதனம் என்று கூறப்பட்டிருக்கிறதே யொழிய ஒரு இடத்திலாவது தர்மம் ஸ்வர்க்க ஸாதனம் என்பது கூறப்படவில்லையே என்ற சங்கை இங்கு எழலாம். ஆனால் முன்னால் கூறியுள்ளதுபோல் யாகாதி கர்மாக்கள் நாம் பார்க்கும் பொழுதே அழிந்துபோவதால் பிற்காலத்தில் உண்டாகப்போகும் ஸ்வர்க்காதி பலன்களுக்கு அவை காரணமாகமாட்டா. வேதமோ அவை காரணமென்று கூறுகிறது. அது பொய்யாயிருக்க முடியாது. ஆகவே பலனேற்படும்வரை ஸ்திரமாயிருக்கும் அதிருஷ்டமான தர்ம மூலம்தான் யாகம் ஸ்வர்க்க ஸாதனமாகுமென்பது வேதத்தின் அபிப்பிராயம். இவ்வீதம் தர்மமே ஸ்வர்க்க ஸாதனமாவதால் அதுவும் பரம புருஷார்த்தமன்று.

முதல் பாகம்

இதுவரை தர்மார்த்த காமங்களை புருஷார்த்தமென்று வைத்துக்கொண்டு இதில் எது சிறந்தது என்பதை ஆராய்ந்தோம். உண்மையில் விசாரித்துப் பார்த்தோமானால் இவைகளை புருஷார்த்தமென்றே கூறமுடியாது. புருஷார்த்தமென்ற சொல்லிற்கு மானிடரால் விரும்பப்படுவது என்பது பொருள். உலகில் எல்லோரும் "எனக்கு ஸுகமே வேண்டும். துக்கம் வேண்டாம்" என்று ஸுகத்தையும் துக்கமின்மையையுமே விரும்புகிறார்கள். ஆகவே ஸுகமும் துக்கமின்மையுமே புருஷார்த்தமாகும். தர்மார்த்த காமங்கள் ஸுகமுமன்று துக்கமின்மையுமன்று ஆனாலும் புருஷார்த்தங்களான ஸுகத்திற்கும் துக்க மின்மைக்கும் ஸாதனமாவதுபற்றி இவைகளையும் புருஷார்த்தங்களென சாஸ்திரங்களில் கூறுகிறார்கள். உலகில் "நீர் எவ்வாறு ஜீவனம் செய்துவருகிறீர்" என்று கேட்டால் "கலப்பையே ஜீவனம்" என்று பதில் கூறுகிறான். இது தவறு. கலப்பையென்பது உயிருடன் வாழ்வதென்ற ஜீவனமுமாகாது. உயிர் வாழ்வதற்கு வேண்டிய ஆஹாரமுமாகாது. இருந்தாலும் கலப்பையால் உழுது பயிரிட்டு கிடைத்த ஆஹாரத்தால் ஜீவனம் நடப்பதால் கலப்பையே ஜீவனம் என்று சொல்கிறோம். அது போலவே தர்மார்த்த காமங்களும் புருஷார்த்தங்களான ஸுகத்திற்கும் துக்கமின்மைக்கும் காரணமாயிருப்பதால் இவைகளையும் புருஷார்த்தமெனக் கூறுவதில் தவறில்லை.

மேற்கூறிய விதமாக இவைகளையும் புருஷார்த்தமென வைத்துக் கொண்டாலும் இவை உயர்ந்தவைகளாகா. ஏனெனில் இவையும் அழிந்து போகின்றன. பொருள், காமம் இரண்டும் அழிந்துபோவதை நாம் நேரில் காண்கிறோம். தர்மம் அதீந்திரியம் (நேரில் அறிந்துகொள்ள முடியாது). வேதமூலம்தான் அறிந்துகொள்ள வேண்டும். அந்த வேதமே தர்மம் அழிந்துபோவதையும் கூறுகிறது.

'तद्यथेह कर्मचितो लोकः क्षीयते एवमेवामुत्र पुण्यचितो लोकः क्षीयते'

'தத்³யதே²ஹ கர்மசிதோ லோக: க்ஷீயதே ஏவமேவாமுத்ர புண்யசிதோ லோக: க்ஷீயதே'

(விவசாயம் முதலான தொழிலைக்கொண்டு ஸம்பாதிக்கப்பட்ட தான்யாதிகள் அழிந்து போவதைப்போல புண்யத்தால் ஸம்பாதிக்கப்பட்ட தேவாதி லோகங்களும் அழிந்து போகின்றன) என்று வேதமே கூறுகிறது.

'क्षीणे पुण्ये मर्त्यलोकं विशन्ति'

'க்ஷீணே புண்யே மர்த்யலோகம்' விஶந்தி'

முதல் பாகம்

(புண்யம் தீர்ந்ததும் மனுஷ்யலோகம் வருகிறார்கள்) என்று கீதை கூறுகிறது. ஆகவே இம்மூன்றும் அழிந்துபோகக் கூடியதால் சிறந்த புருஷார்த்தமாகாது. அழியாத மோக்ஷ மொன்றுதான் உயர்ந்த புருஷார்த்தம். எப்படியெனில்

‘ब्रह्मविदाप्नोति परम्’

‘ப்³ரஹ்மவிதா³ப்னோதி பரம்’

(பிரம்மத்தையறிந்தவன் பரமானந்த ஸ்வரூபத்தையடைகிறான்) என்பதால் மோக்ஷம் ஸுகரூபமென்பதும்,

‘तरति शोकमात्मवित्’

‘தரதி ஶோகமாத்மவித்’

(ஆத்மாவை அறிந்தவன் துக்கத்தைத் தாண்டுகிறான்) என்பதால் மோக்ஷம் துக்கமின்மையென்றும் தெரிவதால் இதுவே முக்கிய புருஷார்த்தம். மேலும் தேவயான மார்க்கத்தால் ஸகுண ப்ரஹ்மத்தையடைந்த ஸகுண ப்ரஹ்ம உபாஸகர்களே மறுபடியும் இங்கு வந்து ஸம்ஸார துக்கத்தை அனுபவிக்கமாட்டார்கள் என்றால் அகண்ட ஸச்சிதானந்த ரூபமான ஆத்மஸ்வரூபத்தை அறிந்தவர்கள் ஸம்ஸார துக்கத்தை அனுபவிக்கமாட்டார்கள் என்பது சொல்லவேண்டியதேயில்லை. இதனால் மோக்ஷம் சாஸ்வதமானது, அழிவற்றது என்று தெரிகிறது.

आब्रह्मभुवनाल्लोकाः पुनरावर्तिनोऽर्जुन ।
मामुपेत्य पुनर्जन्म दुःखालयमशाश्वतम् ।
नाप्नुवन्ति महात्मानः संसिद्धिं परमां गताः ॥
इदं ज्ञानमुपाश्रित्य मम साधर्म्यमागताः ।
सर्गेऽपि नोपजायन्ते प्रलये न व्यथन्ति च ॥
यद्गत्वा न निवर्तन्ते तद्धाम परमं मम । (गीता)

ஆப்³ரஹ்மபு⁴வனால்லோகா: புனராவர்தினோ(அ)ர்ஜுன ।
மாமுபேத்ய புனர்ஜன்ம து³:கா²லயமஶாஶ்வதம் ।
நாப்னுவந்தி மஹாத்மான: ஸம்’ஸித்³தி⁴ம்’ பரமாம்’ க³தா: ॥
இத³ம்’ ஜ்ஞானமுபாஶ்ரித்ய மம ஸாத⁴ர்ம்யமாக³தா: ।
ஸர்கே³(அ)பி நோபஜாயந்தே ப்ரலயே ந வ்யத²ந்தி ச ॥
யத்³க³த்வா ந நிவர்தந்தே தத்³தா⁴ம பரமம்’ மம । (கீ³தா)

முதல் பாகம்

பகவத் கீதையிலும் “ப்ரஹ்மலோகம் வரை எந்த லோகத்திற்குப் போனாலும் திரும்பிவர வேண்டியதுதான்”. ‘என்னையடைந்தவர்கள் உயர்ந்த நிலைமையை அடைந்திருப்பதால் மறுபடியும் துக்கத்திற்கு இருப்பிடமான நிலையற்ற பிறவியை அடையமாட்டார்கள்’. “இந்த ஞானத்தைப்பெற்று என்னுடன் ஐக்யமானவர்கள் சிருஷ்டிகாலத்தில் பிறக்கமாட்டார்கள். பிரளயகாலத்தில் கஷ்டமடையவும் மாட்டார்கள்”. “எந்த ஸ்வரூபத்தை அடைந்தவர்கள் மறுபடியும் திரும்பி வரமாட்டார்களோ அதுவே என் ஸ்வரூபம்” என்றிவ்வாறு பகவான் உபதேசிக்கிறார். இதனால் ப்ரஹ்ம ஸ்வரூபமான மோக்ஷம் அழிவற்றது ஸுகரூபமென்று தெரிகிறது.

மேலும் உலகில் அநித்யமாகக் காணப்படும் பொருள்களைக்காட்டிலும் விலக்ஷணமாயிருப்பதாலும் மோக்ஷம் நித்யமே. அநித்யப் பொருள் 1. உத்பாத்யம் 2. ப்ராப்யம் 3. ஸம்ஸ்கார்யம் 4 விகார்யம் என்று நான்கு விதமாகத் தானிருக்கும் மோக்ஷமென்பது பலனாயிருந்தாலும் இந்நான்கிலும் சேராததால் நித்யமே. 1. மோக்ஷமென்பது உத்பாத்யம் (உண்டாகிற பயன்) அன்று. உண்டாகும் பொருள் அழிவது திண்ணமாதலால் அதை மோக்ஷமென்று மோக்ஷவாதிகள் சொல்லார்கள். நித்யமான பொருளே மோக்ஷமென்று எல்லா மோக்ஷவாதிகளும் ஒப்புக்கொள்கிறார்கள். 2. ஒருவன் ஒரு ஊரை விட்டு மற்றொரு ஊரையடைவதுபோல மோக்ஷமென்பது இவ்வுலகை விட்டு வேறு உலகையடைவதுமன்று. ஏனெனில் எப்பொழுதும் எங்கும் நிறைந்ததான ஆத்மா தன் ஸ்வரூபமான மோக்ஷத்தை தானே எப்படியடைய முடியும்? ஏற்கனவே அடைந்ததை அடைகிறான் என்பதும் பொருந்தாதல்லவா? 3. கண்ணாடி முதலியவைகளிலுள்ள அழுக்கை எடுத்து அதை சுத்தப்படுத்துவது போல ஆக்மாவிலுள்ள அழுக்கை எடுத்து அதை சுத்தப்படுத்துவதுதான் மோக்ஷமென்றும் கூற முடியாது. ஆத்மஸ்வரூபத்தில் எப்பொழுதும் ஒருவித அழுக்கும் கிடையாது அதில் ஒருவித விசேஷத்தையும் உண்டுபண்ணவும் முடியாது. 4. உண்டாக்கப்படும் பொருள் தான் ஒருவிதத்தில் விகார்யமாகும். பால் தயிராக விகாரத்தை அடைகிறது. ப்ரஹ்மம் உண்டாவதில்லை. அதில் ஒருவித மாறுதலும் கிடையாது. இந்நான்கிலும் ப்ரஹ்ம ஸ்வரூபமான மோக்ஷம் சேராததால் அநித்யமல்ல. ஆகவே அழிவற்றதாயும் நேரிடையான புருஷார்த்தமாக - வுமிருப்பதால் மோக்ஷமே உயர்ந்த புருஷார்த்தம்.

ஆனால் வேதத்தில் சில இடங்களில்,

“अक्षय्यं ह वै चातुर्मास्ययाजिनः सुकृतं भवति ”

“अपाम सोमममृता अभूम”

“அக்ஷய்யம்’ ஹ வை சாதுர்மாஸ்யயாஜினः ஸுக்ரு’தம்’ ப⁴வதி ”

முதல் பாகம்

“அபாம ஸோமமம்ரு’தா அபூ^{4}ம”

(“சாதுர்மாஸ்யம் என்ற யாகம் செய்தவர்களுடைய புண்யம் அழிவற்றது” என்றும் ‘ஸோமரஸத்தைப் பானம் செய்தோம், அழிவற்றவர்களானோம்’ என்றும் கூறியிருப்பதால் தர்மமும் அதன் பயனும் நித்யமென்று ஏற்படுகிறது. மோக்ஷமொன்றே நித்யமென்று எப்படிக் கூறலாம் என்ற கேள்வி எழும். கர்மபலன் அழிவற்றது என்று சொல்லும் வேதமே மற்றோரிடத்தில் இவ்வுலகில் வேலைசெய்து ஸம்பாதிக்கப்படுகிற தான்யாதிகள் எவ்வாறு அழிகின்றனவோ அவ்வாறே தர்மத்தால் உண்டாகும் ஸ்வர்க்காதிகளும் அழியும், என்று சொல்கிறது. இரண்டும் வேதவாக்யம். இரண்டும் ப்ரமாணம், ஒன்றைமட்டும் ஒப்புக்கொண்டு மற்றொன்றை தள்ளிவிடுவது சரியல்ல, ஆதலால் எந்த வேதவாக்யம் உலக அநுபவத்திற்குப் பொருந்தியிருக்கிறதோ அது உண்மை என்றும் மற்றொன்று வேறு காரணத்திற்காக அவ்விதம் கூறியிருப்பதாகவும் சொல்ல வேண்டும். வேதத்திற்கும் ஸ்மிருகிக்கும் விரோத மேற்பட்டால் வேதமே பிரமாணம் வேதத்திற்குள்ளேயே விரோதமேற்பட்டால் யுக்திக்குப் பொருத்தமான வேத வாக்யத்தை பிரமாணமாகக் கொள்ளவேண்டும். உண்டாகும் பொருள் அழியும் என்னும் புக்கியைக் காட்டிக் கூறுவதால் தர்மமும் அதன் பயனும் அழியும் என்று கூறும் வேதவாக்யமே பிரமாணம். கர்மபலன் அழிவற்றது என்று கூறும் வேதவாக்யத்திற்கு, மானிட உலகத்தில் போல கொஞ்சகாலத்தில் அழியாது, ப்ரஹ்ம கல்பம்வரை ஸ்திரமாக இருக்கும் என்று பொருள் கொள்ள வேண்டும். இவ்விதம் அபிப்பிராயம் கூறினால் இரண்டு வேதவாக்கியங்களுக்கும் ஒன்றுக்கொன்று விரோதமில்லை. மோக்ஷம் தவிற வேறு எந்த பலனும் வெகுகாலமிருந்தாலும் என்றாவது ஒருநாள் அழிக்துபோகும் என்பது தீர்மானம்.

மோக்ஷமென்பது ஸாலோக்யம், ஸாமீப்யம், ஸாருப்யம், ஸாயுஜ்யம், கைவல்யம் என ஐவகைப்படும். இவைகளில் ஸாலோக்யமென்பது நாம் உபாஸிக்கும் தேவதை வஸிக்கும் லோகத்தையடைவது. அந்த தேவதையின் ஸமீபத்தைபடைவது ஸாமீப்யம். அவர் எந்த உருவத்துடனிருக்கிறரோ அதுபோன்ற உருவத்தை அடைவது ஸாரூப்யம். ஸாயுஜ்யமென்பது ‘அவரே நான்’ என்ற பாவலையுடன் தேவதையை உபாஸித்து அதன் பயனாக அந்த தேவதையுடன் கலந்தவிடுவது. கைவல்யமென்பதோ ஸச்சிதானந்த ரூபமாயும் நித்யமாயும் தன் ஆத்மாவைக் காட்டிலும் வேறல்லாத மூலகாரணமான பரப்ரஹ்ம ஸ்வரூபமாக ஆகிவிடுவது. இதையே அவித்யா நிவிருத்தி யென்றும் கூறுவார்கள்.

‘अविद्यास्तमयो मोक्षः सा च बन्ध उदाहृतः ।’
‘निवृत्तिरात्मा मोहस्य ज्ञातत्वेनोपलक्षितः ।’
‘तस्मादविद्यास्तमयो नित्यानन्दप्रतीतितः ।

முதல் பாகம்

निःशेषदुःखोऽभेदाच्च पुरुषार्थः परो मतः ||'

'அவித்³யாஸ்தமயோ மோக்ஷ: ஸா ச ப³ந்த⁴ உதா³ஹ்ரு'த: |'

'நிவ்ரு'த்திராத்மா மோஹஸ்ய ஜ்ஞாதத்வேனோபலக்ஷித: |'

'தஸ்மாத³வித்³யாஸ்தமயோ நித்யானந்த³ப்ரதீதித: |

நி:ஶேஷது³:கோ²(அ)பே⁴தா³ச்ச புருஷார்த²: பரோ மத: ||'

'அவித்யை நீங்குதலே மோக்ஷம். அவித்யைதான் பந்தம்' என்றும் 'அக்ஞானம் விலகியதும் மிஞ்சுவது ஆத்மா' என்றும் 'அவித்யை விலகியதும் அழிவற்ற ஆனந்தம் ஏற்படுவதாலும் எல்லா துக்கமும் அழிவதாலும் வேற்றுமை - யில்லாததாலும் இதுவே சிறந்த புருஷார்த்தம்' என்றும் பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். கைவல்ய மென்ற இந்த மோக்ஷம்தான் முக்யமானது என்பது ஸூத ஸம்ஹிதையிலும் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

एषैव परमा मुक्तिः प्रोक्ता वेदार्थवेदिभिः ।

अन्याश्च मुक्तयः सर्वा अपराः परिकीर्तिताः ॥

ஏஷைவ பரமா முக்தி: ப்ரோக்தா வேதா³ர்த²வேதி³பி⁴: |

அன்யாஶ்ச முக்தய: ஸர்வா அபரா: பரிகீர்திதா: ||

(வேதத்தின் பொருளையறிந்தவர்கள் இதையே சிறந்த முக்தியாகவும் மற்ற முக்திகளை தாழ்ந்ததாகவும் கூறுகிறார்கள்.)

முக்தி என்னும் சொல் கைவல்யத்தையே கூறுவதாயிருந்தாலும் உலகில் ஸாலோக்யாதிகளையும் அந்த சொல்லால் வியவஹரிக்கிறோம்: ஏனெனில் ஸாலோக்யாதி முக்திகளை அடைந்தவர்கள் மறுபடியும் திரும்பிவருவதில்லை.

ब्रह्मणा सह ते सर्वे संप्राप्ते प्रतिसंचरे |

परस्यान्ते कृतात्मानः प्रविशन्ति परं पदम् ||

ப்³ரஹ்மணா ஸஹ தே ஸர்வே ஸம்ப்ராப்தே ப்ரதிஸஞ்சரே |

பரஸ்யாந்தே க்ரு'தாத்மான: ப்ரவிஶந்தி பரம்' பத³ம் ||

(அவர்களெல்லோரும் அங்கு ஆத்மவிசாரம் செய்து ஆத்ம ஸாக்ஷாத்காரமடைந்து ப்ரளய முடிவில் ப்ரஹ்மாவோடு கூட கைவல்யமடைகின்றனர்) ஆகவே முக்திக்கு ஸாதன மாயிருப்பதாலும், ஸாலோச்யாதிகளை அடைந்தவர்கள் கட்டாயம் முக்தியையடைவதாலும் இவைகளையும் முக்தி என்ற சொல் குறிக்கிறது.

முதல் பாகம்

இந்த கைவல்யமென்பது புதிதாக ஏற்படுவதில்லை, இது பரமாத்மஸ்வரூபம். மாறுதலற்றது. எப்பொழுதும் ஒரே மாதிரியாக உள்ளது. இப்படியானால் இந்த மோக்ஷம் ஏற்கனவே ஸித்தமாக இருப்பதால் இதை அடைய விரும்புவது, இதன் ஸாதனமான ஞானம் ஏற்பட ப்ரஹ்மவித்தான குருவைத் தேடியடைவது, அந்த குருவின் உபதேசம்பெற்று ஆத்மவிசாரம் செய்வது முதலான ஸாதனங்கள் தேவையில்லையே என்று தோன்றலாம். ஆனாலும் ஒருவன் திருவிழாக் கூட்டத்தில் அகப்பட்டுக் கொண்டு தன் கழுத்தில் ஸுவர்ணமாலை இருப்பதை மறந்து எங்கோ தவறிப் போய்விட்டதென்று நினைத்து “என் கழுத்திலுள்ள தங்க மாலையைக் காணவில்லையே! யாரோ திருடிக்கொண்டு போய்விட்டார்களே” என்று ஒவ்வொருவரிடமாகக் கேட்கிறான். அவன் நண்பனொருவன் அவன் கழுத்திலேயே அம்மாலையிருப்பதைக்கண்டு அவனைப் பார்த்து “உன் மாலையை வேறு ஒருவரும் எடுத்துச் செல்லவில்லை. அது உன் கழுத்திலேயே இருக்கிறதே” என்று கூறுகிறான். அதைக்கேட்டு தன் கழுத்தைத் தடவிப்பார்த்து அங்கு மாலையிருப்பதைக்கண்டு சந்தோஷப்படுகிறான். இங்கு மாலை கழுத்திலேயே இருந்த போதிலும் முதலில் தவறிப்போனதாக நினைத்து வருந்துகிறான். பின்னால் அது புதிதாக தனக்கு கிடைத்ததுபோல் எண்ணி சந்தோஷமடைகிறான். இதுபோலவே நாம் எப்பொழுதும் பரமாத்ம ஸ்வரூபமாக இருந்தபோதிலும் அந்நிலையை மறந்து தன் ஆனந்தம் தெரியாமல் ஸதா துக்கத்துடன் ஸுகத்தை அடைய எங்கும் அலைந்து கொண்டிருக்கிறோம். இந்நிலையில் பூர்வ புண்யவசத்தால் ஸத்குருவையடைந்து உபதேசம் பெற்று ஆத்மவிசாரம் செய்வதால் அக்ஞானம் நீங்கி தன் ஸ்வரூபத்தை அறிந்து தன்னிடமுள்ள ஆனந்தத்தையே அனுபவிக்கிறான். ஆகவே அக்ஞானம் நீங்க ஆத்மவிசாரம் முதலான ஸாதனங்கள் அவசியமாகின்றன.

இவ்வாறு கைவல்யம் என்பதுதான் எல்லா புருஷார்த்தங்களிலும் சிறந்தது என்றும், நன்கு விசாரித்தால் கைவல்யம் தான் புருஷார்த்தமென்றும் தீர்மானமாயிற்று. இனிமேல் இந்த கைவல்யத்தை அடைய எது உபாய மென்பதை விசாரிப்போம். உபநிஷத்துக்களில்,

‘तरप्ति शोकमात्मवित्’ ‘ब्रह्मविदाप्नोति परम्’ ‘ब्रह्मविद्ब्रह्मैव भवति’ ‘स यो ह वै तत्परमं ब्रह्म वेद ब्रह्मैव भवति’ ‘नान्यः पन्था विद्यतेऽयनाय’ ‘नास्त्यकृतः कृतेन’ ‘तद्विज्ञानार्थं स गुरुमेवाभिगच्छेत्’ |

‘தரப்தி ஶோகமாத்மவித்’ ‘ப்3ரஹ்மவிதா3ப்னோதி பரம்’ ‘ப்3ரஹ்மவித்3ப்3ரஹ்மைவ ப4வதி’ ‘ஸ யோ ஹ வை தத்பரமம்’ ப்3ரஹ்ம வேத3 ப்3ரஹ்மைவ ப4வதி’ ‘நான்ய꞉ பந்தா2 வித்3யதே(அ)யனாய’ ‘நாஸ்த்யக்ரு’த꞉ க்ரு’தேன’ ‘தத்3விஜ்ஞானார்த2ம்’ ஸ கு3ருமேவாபி4க3ச்சே2த்’ |

முதல் பாகம்

‘ஆத்மாவை அறிந்தவன் துக்கங்களைத் தாண்டி விடுகிறான்’ ‘ப்ரஹ்மத்தை அறிந்தவன் பரவஸ்துவை அடைகிறான்’ ‘ப்ரஹ்மமாகவே ஆகிறான்’ ‘எவனொருவன் பரபிரஹ்மத்தை அறிகிறானோ அவன் ப்ரஹ்மமாக ஆகிறான்’ ‘பிரஹ்ம ஞானத்தைத் தவிற மோக்ஷமடைய வேறு வழியில்லை’ ‘நித்தியமான மோக்ஷம் அநித்யமான காரணங்களால் ஏற்படாது’ ‘அந்த பிரஹ்ம ஞானத்தை அடைய குருவையே தேடியடைய வேண்டும்’, என்று சொல்லியிருக்கிறபடியால் ஞானம்தான் கைவல்யமடைய உபாயம்.

பகவத்கீதையிலும்,

‘बहूनां जन्मनामन्ते ज्ञानवान्मां प्रपद्यते’
‘ततो मां तत्वतो ज्ञात्वा विशते तदनन्तरम्’
‘ப³ஹூனாம்’ ஜன்மநாமந்தே ஜ்ஞானவான்மாம்’ ப்ரபத்³யதே’
‘ததோ மாம்’ தத்வதோ ஜ்ஞாத்வா விஶதே தத³னந்தரம்’

(எத்தனை ஜன்மமெடுத்தபோதிலும் முடிவில் ஆத்மஞான முள்ளவன்தான் என்னை அடைகிறான்; என் அநுக்ரஹத்திற்குப் பாத்திரமான பிறகு என் வாஸ்தவ ஸ்வரூபத்தை நன்கு அறிந்து என்னுடன் ஒன்றாகக் கலக்கிறான்) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இனி இந்த ஞானத்தின் ஸ்வரூபத்தை விசாரிப்போம். அபரோக்ஷானுபூதியில் பகவத்பாதாள்,

ब्रह्मेवाहं समः शान्तः सच्चिदानन्दलक्षणः |
नाहं देहो ह्यसद्रूपो ज्ञानमित्युच्यते बुधैः ||
ப்³ரஹ்மேவாஹம்’ ஸம: ஶாந்த: ஸச்சிதா³னந்த³லக்ஷண: |
நாஹம்’ தே³ஹோ ஹ்யஸத்³ரூபோ ஜ்ஞானமித்யுச்யதே பு³தை⁴: ||

(நான் அஸத்தான தேஹமல்ல. ஸச்சிதானந்த வடிவமும் எங்கும் ஒரேமாதிரியாயிருப்பதும் சாந்தமுமான ப்ரஹ்மமே நான் என்று அறிந்துகொள்வதுதான் ஞானமென்று அறிவாளிகளால் கூறப்படுகிறது.) இதுமுதலான சுலோகங்களால் ஞான ஸ்வரூபத்தை விரிவாகக் கூறுகிறார்கள். நான்கு வேத மஹாவாக்யங்களாலும் உண்டாகிற அகண்டாகார விருத்தி என்று கூறப்படுவதும் இந்த ஞானமேயாம். இந்த ஞானத்தையடைய வேண்டுமானால் நித்யாநித்ய வஸ்து விவேகம்,இஹாமுத்ரார்த்த பலபோக விராகம், சமாதிஷட்கம்,

முதல் பாகம்

முமுக்ஷுத்வம் என்ற நான்கு ஸாதனங்களைக்கொண்டு ஆத்மவிசாரம் செய்து பின் மனனமும், நிதித்யாஸனமும் செய்ய வேண்டும். அப்பொழுது ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படும். இதையே,

'आत्मा वाऽरे द्रष्टव्यः श्रोतव्यो मन्तव्यो निदिध्यासितव्यः|'

'ஆத்மா வா(அ)ரே த்³ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதி³த்⁴யாஸிதவ்ய:|'

என்று உபநிஷத் கூறுகிறது.

பாத்ம புராணத்தில் ஸ்ரீ ராமனுக்கும் பரமசிவனுக்கும் ஸம்வாதமாக உள்ள சிவகீதையில் இதே விஷயம் மிக விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

कथं भगवतो ज्ञानं शुद्धं मर्त्यस्य जायते |
तत्रोपायं हर ब्रूहि मयि तेऽनुग्रहो यदि ||
கத²ம்' ப⁴க³வதோ ஜ்ஞானம்' ஶுத்³த⁴ம்' மர்த்யஸ்ய ஜாயதே |
தத்ரோபாயம்' ஹர ப்³ரூஹி மயி தே(அ)னுக்³ரஹோ யதி³ ||

(மானிடருக்கு சுத்தமான ப்ரஹ்மஞானம் உண்டாக யாது உபாயம்? அதைக் கூறவேண்டும்) என்று ஸ்ரீ ராமர் கேட்க பரமசிவன் பதில் கூறுகிறார்:-

विरज्य सर्वभूतेभ्य आविरिञ्चिपदावधि |
घृणां वितत्य सर्वत्र पुत्रमित्रादिके वपि ||
श्रद्धालुर्मुक्तिशास्त्रेषु वेदान्तज्ञानलिप्सया |
उपायनकरो भूत्वा गुरुं ब्रह्मविदं व्रजेत् ||
सेवाभिः परितोष्येनं चिरकालं समाहितः |
सर्ववेदान्तवाक्यार्थं शृणुयात्सुसमाहितः ||
सर्ववेदान्तवाक्यानां मयि तात्पर्यनिश्चयम् |
श्रवणं नाम तत्प्राहुः सर्वे ते ब्रह्मवादिनः ||
लोहमण्यादिदृष्टान्तयुक्तिभिर्यद्विचिन्तनम् |
तदेव मननं प्राहुर्वाक्यार्थस्योपबृंहणम् ||
निर्मोहो निरहङ्कारः समः सङ्गविवर्जितः |
सदा शान्त्यादियुक्तः सन्नात्मन्यात्मानमीक्षते |
यत्सदा ध्यानयोगेन तन्निदिध्यासनं स्मृतम् ||

முதல் பாகம்

सर्वकर्मक्षयवशात्साक्षात्कारोपि चात्मन ।
कस्यचिज्जायते शीघ्रं चिरकालेन कस्यचित् ॥

விரஜ்ய ஸர்வபூ4தேப்4ய ஆவிரிஞ்சிபதா3வதி4 ।
க்4ரு’ணாம்’ விதத்ய ஸர்வத்ர புத்ரமித்ராதி3கே வபி ॥
ஶ்ரத்3தா4லுர்முக்திஶாஸ்த்ரேஷு வேதா3ந்தஜ்ஞானலிப்ஸயா ।
உபாயனகரோ பூ4த்வா கு3ரும்’ ப்3ரஹ்மவித3ம்’ வ்ரஜேத் ॥
ஸேவாபி4: பரிதோஷ்யேனம்’ சிரகாலம்’ ஸமாஹித: ।
ஸர்வவேதா3ந்தவாக்யார்த2ம்’ ஶ்ரு’ணுயாத்ஸுஸமாஹித: ॥
ஸர்வவேதா3ந்தவாக்யானாம்’ மயி தாத்பர்யநிஶ்சயம் ।
ஶ்ரவணம்’ நாம தத்ப்ராஹு: ஸர்வே தே ப்3ரஹ்மவாதி3ன: ॥
லோஹமண்யாதி3த்3ரு’ஷ்டாந்தயுக்திபி4ர்யத்3விசிந்தனம் ।
ததே3வ மனனம்’ ப்ராஹுர்வாக்யார்த2ஸ்யோபப்3ரு’ம்’ஹணம் ॥
நிர்மோஹோ நிரஹங்கார: ஸம: ஸங்க3விவர்ஜித: ।
ஸதா3 ஶாந்த்யாதி3யுக்த: ஸன்னாத்மன்யாத்மானமீக்ஷதே ।
யத்ஸதா3 த்4யானயோகே3ன தன்னிதி3த்4யாஸனம்’ ஸ்ம்ரு’தம் ॥
ஸர்வகர்மக்ஷயவஶாத்ஸாக்ஷாத்காரோபி சாத்மன ।
கஸ்யசிஜ்ஜாயதே ஶீக்4ரம்’ சிரகாலேன கஸ்யசித் ॥

(ப்ரஹ்மலோகம் வரையிலுள்ள எல்லா பதவிகளிலும் வைராக்யத்தையடைந்து எல்லாரிடத்திலும் இரக்கங்கொண்டு வேதாந்த சாஸ்திரங்களில் அதிக நம்பிக்கையுடன் அதில் கூறப்படும் வஸ்துவை அறிய விருப்பம்கொண்டு கையில் காணிக்கைகளுடன் ப்ரஹ்ம வித்தான குருவைத் தேடியடைந்து ஸேவையால் அவரை திருப்தி செய்வித்து மனதை அடக்கி எல்லா உபநிஷத்துக்களின் தாத்பர்யத்தையும் குருமுகமாக சிரவணம் செய்யவேண்டும். எல்லா உபநிஷத்துக்களுக்கும் என்னிடத்தில்தான் தாத்பர்யம் என்று தீர்மானமாக அறிந்துகொள்வதுதான் சிரவண மெனப்படும். இதையே இரும்பு, மண், தங்கம் முதலான திருஷ்டாந்தங்களாலும், யுக்திகளாலும் விசாரித்துத் தீர்மானித்துக்கொள்வது மனனம். அனாத்மசிந்தனம் ஏற்படாமல் ஆத்மவாஸனை உறுதிப்பட வேறு நினைவில்லாமல் எப்பொழுதும் ஆத்மாவை தியானிப்பது நிதித்யாஸனம். இவ்விதம் ஆத்மவிசாரம் செய்துவந்தால் அவரவர்களுடைய மனத்தின் பரிபாகத்தை அநுஸரித்து உடனேயோ, காலாந்தரத்திலோ ஆத்ம ஸாக்ஷாத்காரம் உண்டாகும்.)

ஆகையால் தன் உண்மை ஸ்வரூபத்தை அறிந்து கொள்வதால் தான் மோக்ஷமேற்படும். இந்த கைவல்ய மென்ற மோக்ஷமே உத்தமமான

முதல் பாகம்

புருஷார்த்தமென்பது எல்லா வேதசாஸ்திர புராணங்களுடைய முடிவான அபிப்பிராயம். எல்லோரும் தன் நிலைமைக்கேற்றவாறு முயற்சிசெய்து முடிவில் இந்த கைவல்யமென்னும் மோக்ஷத்தையடைய வேண்டும்.

சுபம்.

(மலர் 1 - இதழ் 1)

குருவின் மஹிமை

பிராந்தியங்கரை பண்டிதராஜ

ப்ரஹ்மஸ்ரீ S. ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள், மதராஸ்

'ஒரே ஒரு அக்ஷரத்தை உபதேசித்த குருவும் கூட பூஜ்யர். அப்படியிருக்க சாஸ்திரம் முழுமையும் உபதேசித்த வரைப்பற்றிக் கேட்கவேண்டுமா?' என்று துஷாக்னியில் (உமிக்காந்தல் நெருப்பில்) பிரவேசிக்கும் தறுவாயிலிருந்த ஸ்ரீ குமாரிலபட்டர் பகவத்பாதாளிடம் சொல்லி தனது பௌத்த குருவை தான் தூஷித்ததற்கு இந்த பிராயச்சித்தம் செய்துகொள்ளும் நிச்சயத்தை தெரிவித்தார்.

குரு என்னும் பதத்திற்கு அக்ஞானத்தைப் போக்கடிப்பவர் என்று பொருள். (**गु: (கு³:)** = இருட்டு, **रु: (ரு:)** = அதை போக்குபவர்) குரு என்றால் பாரம் (கனம்)என்றும் பொருள் உண்டு. முதல் அர்த்தத்தின்படி சிறிய சிறிய வித்யையைக் கற்றுக் கொடுப்பவர் சிறிய அக்ஞானத்தைப் போக்கடிக்கிறார். பிரஹ்ம வித்யையை உபதேசிப்பவர் மூலாக்ஞானத்தைப் போக்கடிப்பார். கனம் என்றால் ஞானத்தால் அவர் கனமானவர் என்று பொருள்.

यस्य देवेपरा भक्तिः यथा देवे तथा गुरौ |
तस्येते कथिता ह्यर्थाः प्रकाशन्ते महात्मनः ||
யஸ்ய தே³வேபரா ப⁴க்தி: யதா² தே³வே ததா² கு³ரௌ |
தஸ்யேதே கதி²தா ஹ்யர்தா²: ப்ரகாஶந்தே மஹாத்மன: ||

என்ற ச்வேதாச்வதரோபநிஷத் வாக்யம் 'எவனுக்கு குருவிடம் உயர்ந்த பக்தி இருக்கிறதோ அவனுக்கு குரு சொல்லிய விஷயங்களெல்லாம் பிரகாசிக்கின்றன ' என்பது மட்டுமல்லாமல் எவனுக்கு (**अपरा भक्तिः**) (**அபரா ப⁴க்தி:**) குருவிடம் நிரதிசயமான பக்தி இருக்கிறதோ அவனுக்கு (**अकथिता ह्यर्थाः**) (**அகதி²தா ஹ்யர்தா²:**)

முதல் பாகம்

குரு சொல்லாத விஷயங்களும் பிரகாசிக்கின்றன என்பதையும் தெளிவுபடுத்துகிறது.

சதசுலோகியில் **दृष्टान्तो नैव दृष्टः த்3ரு’ஷ்டாந்தோ நைவ த்3ரு’ஷ்ட:** என்ற சுலோகத்தால் பகவத்பாதாள் குருவின் மஹிமையைத் தெளிவாகத் சொல்லியிருக்கிறார்கள். அதாவது உலகில் ஞானத்தை உபதேசிக்கிற ஸத்குருவுக்கு நிகரே இல்லை. ஒருவேளை ஸ்பர்சமணியை உபமானமாகச் சொல்லலாமோ எனில் முடியாது. ஏனெனில் ஸ்பர்சமணி தன் ஸம்பர்கத்தால் இரும்பைத் தங்கமாகச் செய்கிறது. இரும்பை ஸ்பர்ச மணியாக்குவதில்லை. அப்படி செய்திருந்தால் அந்த தங்கத் தைக்கொண்டு மற்ற உலோகங்களையும் தங்கமாக்கலாம். ஆனால் ஸத்வித்யையை உபதேசிக்கும் குருவோ எனில் 'ஸ்வீயம் ஸாம்யம்' அதாவது தன்னுடைய பிரம்ம பாவத்தை சிஷ்யனிடம் உண்டாக்குகிறார். அதனால் அவனும் தன் சிஷ்யர்களை பிரம்மமாகச் செய்ய ஸமர்த்தனாகிறான் என்கிறார். இவ்விடம் id என்ற கீதா சுலோகத்தை அனுசரித்து ஈர் என்றால் பிரம்ப பாவம் என்று பொருள். ஆதலால் குருவுக்கு உவமையே இல்லை. ஆகவே அவன் உலகத்திற்கு அதீதன் என்று பொருள். அல்லது லோகத்திலிருக்கும் ஸாதாரண உபாத் யாயர்களும் உவமை இல்லாதவர்கள் என்று பொருள்.

உபநிஷத்துக்கள் ஆத்மஞானத்தை யுக்தியால் அடையமுடியாது (**नैषा तर्केण मतिरापनेया**) (**நைஷா தர்கேண மதிராபனேயா**). அதை குருவின் உபதேசத்தாலேயே அடையமுடியும். (**तद्विज्ञानार्थे गुरुमेवाभिगच्छेत्**) (**தத்3தி4ஜ்ஞானார்தே2 கு3ருமேவாபி4க3ச்சே2த்**) என்று கதறுகின்றன. சாந்தோக்யமோ பரபிரமத்தை **आदेशं** (**ஆதே3ஶம்’**) உபதேசத்தால் மாத்திரம் அறியத்தக்க வஸ்து என்கிறது. ஆகவே யுக்திகளால் அறிய முடியாத வஸ்துவை குருவின் அனுக்ரஹத்தால் அறியலாம் என்று ஏற்பட்டது.

நமது தேசத்தில் குரு பக்தியால் கரையேறியவர்கள் கணக்கில்லை. சாந்தோக்ய உபநிஷத்தில் 4-வது அத்யாயத்தில் ஸத்யகாம ஜாபாலர் கதையை எடுத்துக் கொள்ளலாம். ஸத்யகாமன் என்னும் பையன் பால்யத்தில் தகப்பனை இழந்தவன். வயது ஏழு ஆகிவிட்டது. உபநயனம் செய்துவைக்கும் குருவை அடையவேண்டித் தாயிடம் தன் கோத்திரத்தைக் கேட்டான். அவள் கண்ணீருடன் 'நான் பால்யத்தில் உன் தகப்பனாருக்கு சுக்ரூஷை செய்துகொண்டு அவருடன் ஸஞ்சாரத்தில் இருந்தேன். அப்பொழுது உன்னைப் பெற்றேன். உன் கோத்திரம் எனக்குத் தெரியாது. ஸத்யகாமன் ஜாபாலன் என்று குருவிடம் சொல்' என்றாள். பால்யத்தில் லஜ்ஜையால் பர்த்தாவிடம் கோத்ரத்தைக் கேட்டுத்தெரிந்து கொள்ள முடியவில்லை. பின்பு கேட்பதற்கு அவரே இல்லை என்பது இதன் பொருள். சில நவீன ஆராய்ச்சிக்காரரர்கள் **बह्वहं चरन्ती परिचारिणि** (**ப3ஹ்வஹம்’ சரந்தீ பரிசாரிணி**)என்பதற்கு நான் பல புருஷர்களிடம் ஸம்பந்தப்பட்டதால் உன்

முதல் பாகம்

கோத்திரம் தெரியவில்லை என்று விபரீதார்த்தம் செய்கிறார்கள். இந்த பதங்கள் அந்த அர்த்தத்தை எப்படிக் கொடுக்கும் என்பதை அவர்கள் நிரூபிக்கவேண்டும். பரிசாரிணீ என்றால் சுச்ரூஷை செய்பவள் என்றுதான் பொருள். **बहु चरन्ती** (**ப³ஹு சரந்தீ**) என்றால் ஸஞ்சாரம் செய்தாள் என்றுதான் பொருள். ஆகவே இந்த அர்த்தம் செய்த மஹான்களுடைய அறிவை என்ன சொல்வேன் ! மேலும் பல புருஷர்கள் இருந்தாலும் தாய்க்கு இந்தக் குழந்தைக்கு தகப்பன் இவன் என்பது நிச்சயமாய் தெரியுமாதலால் 'எனக்கு உன் தகப்பன் யாரெனத் தெரியாது' என்பதும் பொருந்தாது. மேலும் கௌதமர் என்ற குரு ஸத்யகாமன் வார்த்தைகளைக் கேட்டு 'இதை அப்ராமணன் சொல்ல முடியாது. ஆதலால் உனக்கு உபநயனம் செய்விக்கிறேன்' என்கிறார். ஜார புருஷனுடைய புத்ரனுக்கு பிராம்மண்யம் கிடையாது. ஆகவே இந்த வாக்யமும் பொருந்தாது என்பதை அறியவேண்டும். உபநயனமடைந்த சிறுவன் குரு பக்தியால் குருவின் 400 மாடுகளை மேய்க்கச்சென்று அவைகள் 1000 ஆகும் வரையில் காட்டிலிருந்தான். கடைசியில் ரிஷபத்தில் ஆவேசத்தை அடைந்த தேவதைகள் அதன் வாயிலாக ஆத்ம வித்யையை உபதேசித்தனர். குருவும் அதை அங்கீகரித்து அதே வித்யையை மறுபடியுமுபதேசித்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஜாபாலரிடம் கற்கவந்த உபகோஸலனும் குருவின் அக்னிகளுக்கு சுச்ருஷை செய்து அக்னிகளின் அனுக்ரஹத்தால் ஆத்மவித்யையை அடைந்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மஹாபாரதத்தின் ஆதியில் உத்தாலகர் முதலிய சிஷ்யர்கள் குரு சுச்ருஷை செய்து குருவின் அநுக்ரஹத்தால் ஸகல வித்யைகளையுமடைந்தனர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. குருவுக்கும் ஈச்வரனுக்கும் ஆத்மாவுக்கும் வேறுபாடில்லை என்று ஸ்ரீ ஸுரேச்வராசார்யாள் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரவார்த்திகத்தில் கூறுகிறார்கள். ஸ்ரீ பாவத்பாதாள் விவேகசூடாமணியில் தன் குருவான கோவிந்த பகவானை ஸ்ரீ கோவிந்தனாகவே ஸ்துதி செய்கிறார்கள். பிரம்மவித்யையை உபதேசித்த பிப்பலாதரை பாரத்வாஜர் முதலிய 6 ரிஷிகளும், பெற்றுக்கொண்ட பிரம்மவித்யைக்கு பதில் செய்ய முடியாதவர்களாக குருவின் பாதங்களை அர்சித்து கால்களில் விழுந்து "நீங்கள் அல்லவா எங்கள் தகப்பன் அவித்யையை நிவர்த்தி செய்து எங்களுக்கு நித்யானந்த பிரஹ்ம சரீரத்தைக் கொடுத்தவர்" என்கிறார்கள்.

குருவுக்கும் சில நியமங்கள் உண்டு. சிஷ்யனை எந்த விதத்தாலும் கிருதார்த்தனாக்க வேண்டும் என்பது ஓர் நியமம். அதனால்தான் தன்னிடம் ஆத்மஞானத்தை நாடி வந்த நாரதருக்கு ஸநத்குமாரர் 'பிராணனே பிரம்மம்' என்று உபதேசித்ததும், அதைக்கேட்டு திருப்தியடைந்து மேலே கேட்கத் தெரியாதபோது **एष तु वा अतिवदति** (**ஏஷ து வா அதிவத³தி**)என் ஆரம்பித்து முக்ய பிரம்மத்தை உபதேசிக்கிறார். கேந உபநிஷத்தில் "பிரம்மத்தை நான் நன்றாக அறிகிறேன் என்று தெரிந்தால் அவன் அக்ஞன்" என சிஷ்யனுடைய ஞானப்போக்கை பரீக்ஷிக்கிறார். சிஷ்யனை கிருதார்த்தனாகச் செய்யாமல்

முதல் பாகம்

அவனிடம் தக்ஷிணைபெறக் கூடாதென்பதும் ஓர் நியமம். அதனால்தான் ஜனகர் யாக்ஞவல்கியரிடம் ‘வாக்கே பிரம்மம்' என்ற உபாஸனையைக்கேட்டு அவருக்கு யானைபோன்ற ரிஷபத்துடன் 1000 மாடுகளைக் கொடுக்க, யாக்ஞவல்கியர் ‘சிஷ்யனை கிருதார்த்தனாகச் செய்யாது அவனிடம் வாங்கக்கூடாது என்பது என் தகப்பனார் நியமம்’ என்று சொல்லி நிராகரித்துவிட்டார்.

பகவத்பாதாளுடைய சரித்திரத்தில், ஆசார்யாள் அனுக்ரஹமாத்ரத்தால் தோடகருக்கு ஞானம் உதித்ததைக் கேட்டிருக்கிறோம். குருபக்தியால் கங்கை, பத்மபாதாள் காலடிவைத்த இடமெல்லாம் தாமரையைத் தோன்ற வைத்து, அவரைக் காப்பாற்றி அக்கரைக்குக் கொண்டு போய்ச் சேர்த்தாள் என்பதையும் கேட்டிருக்கிறோம்.

‘गुरुं प्रकाशयेत् धीमान् मन्त्रं यत्नेन गोपयेत्’

‘கு³ரும்’ ப்ரகாஶயேத் தீ⁴மான் மந்த்ரம்’ யத்னேன கோ³பயேத்’

என்றபடி குருவை ஸபைகளில் புகழ்ந்து கௌரவிக்க வேண்டும். ஸ்ரீ பத்மபாதாள் தன் குருவான பகவத்பாதாளை **अपूर्वशंकरं** (**அபூர்ஷஶங்கரம்**’) ‘கைலாஸபதியே வேறு உருவம் கொண்டுவந்தவர் இவர்’ என்கிறார். ஸுரேச்வரர் ‘ஸ்ரீ சங்கரர் என்ற ஸூர்யன் உதித்தபின் அவர் ஸந்நிதியில் இந்த ஸூர்யன், சந்திரன் போல் மங்கிவிட்டான்’ என்கிறார். மதுஸூதன ஸரஸ்வதி ஸ்ரீ சங்கரரை சிவாவதாரமாகப் புகழ்கிறார். ஸ்ரீ சித்ஸுகர் ‘தக்ஷிணாமூர்த்தி என்றும், வியாஸர் என்றும், சங்கரர் என்றும் பெயர் வாய்ந்த ஜ்யோதியை நமஸ்கரிக்கிறேன்’ என்கிறார். ‘ஈச்வரனுக்குக் கோபம் வந்தால் குரு காப்பாற்றுவார். குருவுக்கு கோபம் வந்தால் காப்பாற்றுபவரில்லை' என்று புராணம் கூறுகிறது. ஆகவே குருவின் பிரஸாதம் அவச்யம் ஸம்பாதிக்கத் தகுந்ததென்று ஏற்படுகிறது ஸ்ரீ ஸத்குரு சரணத்தைத் தியானித்து அவர் பிரஸாதத்தை அடைந்து பரமபுருஷார்த்தத்தை அடைவோமாக.

(மலர் 1 இதழ் 1)

முதல் பாகம்

கடல் கடந்த ஸனாதன தர்மம் 1

(ஆசிரியர் ஸ்ரீ சங்கர க்ருபா ஸ்ரீ K R வெங்கடராமன்)

சுமார் 1500 வருஷங்களுக்கு முன் இப்பரதநாட்டிலிருந்து சமயக்குரவர்களும், வியாபாரிகளும், தொழிலாளிகளும் வங்காளக்குடாக்கடல், இந்துமஹா - ஸமுத்திரம் இவைகளைத் தாண்டி பர்மா, மலேயா, தாய்லாந்து, கம்போஜம், வியட்னாம், இந்தோனேஷியத் தீவுகள் முதலிய நாடுகளில் குடியேறி, நம் நாட்டு கலாசாரங்களையும் சமயங்களையும் அங்கே பரப்பி, நம் நாட்டுக் கோவில்களைப்போல தேவாலயங்களையும் கட்டுவித்து அந்நாடுகளின் வளத்தைப் பெருக்கியதுடன் ஸனாதன தர்மத்தையும் பரப்பி வந்தனர். ஸனாதன தர்மத்தைத் தழுவிய அநேக அரச வம்சங்களும் பல நூற்றாண்டுகளாக அங்கு மிகச் செழிப்புடன் விளங்கி வந்தன. 15-வது நூற்றாண்டில் மலேயா, சுமத்ரா, ஜாவா, நாடுகளில் அரபியர்கள் புகுந்து தங்கள் இஸ்லாமிய மதத்தைப் பரப்பினர். மற்ற நாடுகளில் புத்தமதம் முக்கிய இடம் பெற்றிருக்கிறது. ஆனாலும் அங்கு இப்பொழுது இந்துமதக் கொள்கைகளும், புத்தமதக் கொள்கைகளும் கலந்தே காணப்படுகின்றன.

ஜாவாவுக்குக் கிழக்கே பாலி என்ற சிறு தீவு இருக்கிறது. அது மிகவும் வளம்பெற்ற நாடு. அங்கு இன்றும் ஜனங்கள் ஸனாதன தர்மத்தைத் தழுவியே இருக்கிறார்கள். நம் நாட்டில் போலவே அங்கும் வர்ணாச்ரமக் கொள்கைகளும், கிருஹ்ய தர்மங்களும் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கோவிலாவது இருக்கும். அந்தக் கோவில்களிலும் நம் நாட்டில் போலவே வழிபாடுகள் நடந்து வருகின்றன. கோவில்களில் அடிக்கடி திருவிழாக்கள் நடத்துகின்றனர். திருவிழாக் காலங்களில் சிறந்த ஆடல் பாடல் முதலியவை நடைபெற்று வருகின்றன. நம் நாட்டு இதிஹாஸங்கள் அங்கு கொண்டாடப்படுகின்றன. நாம் கொண்டாடும் சிவன் விஷ்ணு முதலான தெய்வங்களையே அவர்களும் வழிபடுகின்றனர். பாலி தீவில் ஜனங்களிடையே வழங்கிவரும் சிவஸ்தோத்ரங்களில் சிலவற்றை இங்கு தமிழ் உரையுடன் குறிப்பிடுகிறோம்.

ஆசிரியர்.

முதல் பாகம்

॥ शिवस्तवः ॥

ओं नमः शिवाय शर्वाय देवदेवाय वै नमः ।
रुद्राय भुवनेशाय शिवरूपाय वै नमः ॥१॥
ஓம் நம: ஶிவாய ஶர்வாய தே³வதே³வாய வை நம: |
ருத்³ராய பு⁴வனேஶாய ஶிவரூபாய வை நம: ||1||

(ப்ரளயகாலத்தில்) உலகை அழிக்கும் சிவனுக்கு நமஸ்காரம். தேவர்களுக்கும் தேவனான சிவனுக்கு நமஸ்காரம். துன்பத்தைப் போக்கடிப்பவரும் உலகிற்கு ஈசனும் மங்களரூபியுமான சிவனுக்கு நமஸ்காரம். (1)

त्वं शिवस्त्वं महादेव ईश्वरः परमेश्वरः ।
ब्रह्मा विष्णुश्च रुद्रश्च पुरुषः प्रकृतिस्तथा ॥२॥
த்வம்' ஶிவஸ்த்வம்' மஹாதே³வ ஈஶ்வர: பரமேஶ்வர: |
ப்³ரஹ்மா விஷ்ணுஶ்ச ருத்³ரஶ்ச புருஷ: ப்ரக்ரு'திஸ்ததா² ||2||

தாங்கள் தான் சிவன், மஹாதேவன், ஈசுவரன், பரமேசஸ்வரன் என்று சொல்லப்படுகிறீர்கள். ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் (என்ற மும்மூர்த்திகளும்) நீங்கள் தான். (ஸாங்க்யர்கள் கூறும்) புருஷனும் ப்ரகிருதியும் தாங்களே (2)

त्वं कालस्त्वं यमो मृत्युर्वरुणस्त्वं कुबेरकः ।
इन्द्रः सूर्यः शशाङ्कश्च ग्रहनक्षत्रतारकः ॥३॥
த்வம்' காலஸ்த்வம்' யமோ ம்ரு'த்யுர்வருணஸ்த்வம்' குபே³ரக: |
இந்த்³ர: ஸூர்ய: ஶஶாங்கஶ்ச க்³ரஹநக்ஷத்ரதாரக: ||3||

காலன், யமன், மிருத்யு, வருணன், குபேரன், இந்திரன், ஸூர்யன், சந்திரன், கிரஹங்கள், 27 நக்ஷத்ரங்கள், (ஆகாயத்தில் ஒளியுடன் விளங்கும்) மற்ற நக்ஷத்ரங்கள் இவைகளெல்லாம் தாங்களே. (3)

पृथिवी सलिलं त्वं हि त्वमग्निर्वायुरेव च ।
आकाशं त्वं परं शुन्यं सकलं निष्कलं तथा ॥४॥
ப்ரு'தி²வீ ஸலிலம்' த்வம்' ஹி த்வமக்³நிர்வாயுரேவ ச |
ஆகாஶம்' த்வம்' பரம்' ஶூன்யம்' ஸகலம்' நிஷ்கலம்' ததா² ||4||

முதல் பாகம்

பூமி, நீர், தேஜஸ், வாயு, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்களும் தாங்களே. (பௌத்தர்கள் கூறும்) சூன்யமும் தாங்களே. (உலகில் விளங்கும்) ஸகலமாயும் நிஷ்கலமாயும் உள்ள பொருள்களெல்லாம் தாங்கள் தான். (4)

अशुचिर्वा शुचिर्वापि सर्वकामगतोपि वा |
चिन्तयेद्देवमीशानं स बाह्याभ्यन्तरः शुचिः ||५ ||
அஶுசிர்வா ஶுசிர்வாபி ஸர்வகாமக³தோபி வா |
சிந்தயேத்³தே³வமீஶானம்' ஸ பா³ஹ்யாப்⁴யந்தர: ஶுசி: ||5 ||

அசுத்தனாயிருந்தாலும், சுத்தனாயிருந்தாலும் தன் இஷ்டப்படி எங்கும் சென்றபோதிலும் பரமேசனை மனத்தில் தியானிப்பானேயாகில் அவன் உள்ளும் வெளியும் பரிசுத்தனாகிறான். (5)

नमस्ते देवदेवेश त्वत्प्रसादाद्वदाम्यहम् |
वाक्ये हीनेऽतिरिक्ते वा मां क्षमस्व सुरोत्तम ||६||
நமஸ்தே தே³வதே³வேஶ த்வத்ப்ரஸாதா³த்³வதா³ம்யஹம் |
வாக்யே ஹீனே(அ)திரிக்தே வா மாம்' க்ஷமஸ்வ ஸுரோத்தம ||6||

தேவதேவா, ஈசா, உனக்கு நமஸ்காரம். உன் அருளால் தான் நான் பேசுகிறேன். என் சொல்லில் கூடுதல் குறைவுகள் இருந்தபோதிலும் தேவ சிரேஷ்டா ! என்னைப் பொறுத்தருளவேண்டும். (8)

नमस्ते देवदेवेश ईशान वरदाच्युत |
मम सिद्धं भूयश्च स्वं (सिद्धिः सदा भूयात्) सर्वकार्येषु शंकर ||७||
நமஸ்தே தே³வதே³வேஶ ஈஶான வரதா³ச்யுத |
மம ஸித்³த⁴ம்' பூ⁴யஶ்ச ஸ்வம்' (ஸித்³தி⁴: ஸதா³ பூ⁴யாத்) ஸர்வகார்யேஷு ஶங்கர ||7||

தேவர்களுக்கும் தேவனே, ஈசனே, வரங்களைத் தருபவனே, அச்யுதா, சங்கரா, எப்பொழுதும் எல்லாக் காரியங்களிலும் எனக்கு ஸித்தி உண்டாகட்டும். (7)

ब्रह्मा विष्णुरीश्वरश्च महादेव नमोस्तु ते |
सर्वकार्यं प्रसिध्यतां क्षमानुग्रहकारण ||८||
ப்³ரஹ்மா விஷ்ணுரீஶ்வரஶ்ச மஹாதே³வ நமோஸ்து தே |

முதல் பாகம்

ஸர்வகார்யம்’ ப்ரஸித்4யதாம்’ க்ஷமானுக்3ரஹகாரண ||8||

மஹாதேவா! தாங்களே ப்ரஹ்மாவாகவும், விஷ்ணுவாகவும், ஈசுவரனாகவும் இருக்கிறீர்கள். உங்களுக்கு நமஸ்காரம். மன்னித்து அருள்பவனே, எல்லாக் காரியமும் நிறைவேறட்டும்.

மலர் 1 இதழ் 1

கடல் கடந்த ஸனாதன தர்மம். 2

(ஆசிரியர் ஸ்ரீ சங்கர க்ருபா ஸ்ரீ K R வெங்கடராமன்)

வெகு காலத்திற்கு முன் நம் நாட்டிலிருந்து அயல் நாட்டில் குடியேறியவர்களுள், பாலித்தீவிற்குச் சென்று, அதையே தாய் நாடாகக்கொண்டு வம்ச பரம்பரையாக அங்கு வாழ்ந்த வரும் ஹிந்து மக்களிடம் இப்பொழுதும் வழங்கி வரும் சில ஸ்தோத்திரத்திலிருந்து சில பகுதிகளைத் தமிழ் உரையுடன் சென்ற இதழில் வெளியிட்டோம். ஸமீபத்தில் நம் நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் வரலெக்ஷ்மீ விரதம் விமரிசையா நடைபெற்றிருக்கும். அதையொட்டித் திருமகளின் அருள் நோக்கு வாசகர்களுக்குக் கிட்டுமாறு அதே பாலித்தீவில் உள்ள ஹிந்து மக்களிடம் வழங்கிவரும் ஸ்ரீஸ்தவத்திலிருந்து சில பகுதிகளைத் தமிழ் உரையுடன் இவ்விதழில் நேயர்களுக்குத் தருகிறோம்.

ओं श्रीदेवी महावक्त्रा चतुर्वर्णा चतुर्भुजा ।
प्रज्ञावीर्थसारं (रस) ज्ञेया चिन्तामणिकुरु (करी) स्मृता ॥१॥

ஓம்’ ஸ்ரீதே3வீ மஹாவக்த்ரா சதுர்வர்ணா சதுர்பு4ஜா |
ப்ரஜ்ஞாவீர்த2ஸாரம்’ (ரஸ) ஜ்ஞேயா சிந்தாமணிகுரு (கரீ) ஸ்ம்ரு’தா ||1||

சிறந்த வதன முள்ளவளும், நான்கு நிறங்களும் நான்கு கைகளும் உள்ளவளும், புத்தி வீர்யம் இவைகளின் ஸாரத்தால் அறியத்தக்கவளுமான ஸ்ரீலெக்ஷிமிதேவி

முதல் பாகம்

தன்னை ஸ்மரித்தால் நினைத்ததையெல்லாம் கொடுக்கும் சிந்தாமணியைக் கொடுப்பாள். (1)

श्रीशालिकान्तरूपा त्वं स्निग्धगात्रं च तण्डुलम् |
ददासि मे सदा चित्रं सौभाग्यं लोकपूजितम् ||२||
ஶ்ரீஶாலிகாந்தரூபா த்வம்’ ஸ்னிக்^{3}த^{4}கா^{3}த்ரம்’ ச தண்டு^{3}லம் |
த^{3}தா^{3}ஸி மே ஸதா^{3} சித்ரம்’ ஸௌபா^{4}க்^{3}யம்’ லோகபூஜிதம் ||2||

நெற்பயிர்போல அழகிய ரூபம் கொண்ட நீ, அழகிய உருவங்கொண்ட பலவித அரிசியையும், உலகம் கொண்டாடும்படியான ஸௌபாக்யத்தையும் எப்பொழுதும் எனக்குக் கொடுக்கிறாய். (2)

श्रीताण्डुली महादेवी श्रीमल (त्) कमलशोभिता |
ददासि मे महाभोग्यं सर्वद्रव्यहितं धनम् ||३||
ஶ்ரீதாண்டு^{3}லீ மஹாதே^{3}வீ ஶ்ரீமல (த்) கமலஶோபி^{4}தா |
த^{3}தா^{3}ஸி மே மஹாபோ^{4}க்^{3}யம்’ ஸர்வத்^{3}ரவ்யஹிதம்’ த^{4}னம் ||3||

அழகிய தாமரையுடன் விளங்கும் தான்ய தேவதையான மஹாலெக்ஷ்மியாகிய நீ எல்லா போகப் பொருள்களையும், எல்லா திரவியங்களையும், ஐசுவர்யத்தையும், நன்மையையும் கொடுக்கிறாய். (3)

श्रीव्रीहिमुक्ताजीवा त्वं सर्वभूप (सु) नन्दिनी |
ददासि मे सुखं नित्यं जीवितं धातुकाञ्चनम् ||४||
ஶ்ரீவ்ரீஹிமுக்தாஜீவா த்வம்’ ஸர்வபூ^{4}ப (ஸு) நந்தி^{3}னீ |
த^{3}தா^{3}ஸி மே ஸுக^{2}ம்’ நித்யம்’ ஜீவிதம்’ தா^{4}துகாஞ்சனம் ||4||

நெல் மணிகளால் (எல்லோரையும்) ஜீவிக்கச் செய்யும் நீ எல்லா அரசர்களையும் ஸந்தோஷமடையச் செய்கிறாய். எனக்கு எப்பொழுதும் தங்கத்தையும், நல்வாழ்க்கையையும், ஸுகத்தையும் கொடுக்கிறாய். (4)

श्रीधन (धान्य) देविका रम्या सर्वरूपवती तथा |
सर्वज्ञानमणिश्चैव श्रीश्रीदेवि नमोऽस्तु ते ||५||
ஶ்ரீத^{4}ன (தா^{4}ன்ய) தே^{3}விகா ரம்யா ஸர்வரூபவதீ ததா^{2} |

முதல் பாகம்

ஸர்வஜ்ஞானமணிஸ்சைவ ஸ்ரீஸ்ரீதே³வி நமோ(அ)ஸ்து தே ||5||

அழகு பொருந்திய தான்ய தேவதையான லக்ஷிமியானவள் எல்லா உருவமும் கொண்டவள். எல்லா ஞானங்களையும் மணிகளாகக்கொண்டவள். ஹே ஸ்ரீதேவியே, உனக்கு நமஸ்காரம். (5)

ब्रह्मादिस्तम्बपर्यन्तं जगत् स्थावरजङ्गमम् |
शिवाङ्गमिति तत्सर्वं मां रक्षतु नमोऽस्तु ते |
श्रीदेवि सततं मूर्ध्ना त्वां नमामि च शक्तितः ||६||
ப்³ரஹ்மாதி³ஸ்தம்ப³பர்யந்தம்' ஜக³த் ஸ்தா²வரஜங்க³மம் |
ஶிவாங்க³மிதி தத்ஸர்வம்' மாம்' ரக்ஷது நமோ(அ)ஸ்து தே |
ஸ்ரீதே³வி ஸததம்' மூர்த்⁴னா த்வாம்' நமாமி ச ஶக்திதஃ ||6||

ப்ரஹ்மா முதல் புழுவரையிலுமுள்ள தாவரமாயும் ஜங்கமமாயுமுள்ள உலகெல்லாம் மங்கள மூர்த்தியான லெக்ஷிமியின் உடலே அதெல்லாம் என்னைக் காப்பாற்றட்டும். உனக்கு நமஸ்காரம், ஹே ஸ்ரீ தேவியே! எப்பொழுதும் உன்னை சிரஸால் வணங்குகிறேன்.

மலர் 1 இதழ் 2

கடல் கடந்த ஸனாதன தர்மம். 3

(ஆசிரியர் ஸ்ரீ சங்கர க்ருபா ஸ்ரீ K R வெங்கடராமன்)

பாலித்தீவிலிருந்து வடக்கே செல்லோம். ஜாவாக் கடலையும், தென் சீனக்கடலையும் கடந்து, இந்து-சீனா தீபகற்பத்தின் தென் கிழக்கு பாகத்திலுள்ள மீகோம் நதியின் முகத்துவாரத்தில், சுமார் கி. பி. முதலாம் நூற்றாண்டில் கௌண்டின்யர் என்ற வேதியன் பாரதநாட்டிலிருந்து வந்து, அந்நாட்டின் அரசியை மணந்துகொண்டான். இவர்களின் சந்ததியார் அங்கு ஓர் அரசவம்சத்தை நிறுவினார்கள். இந்நாட்டின் முற்காலப் பெயர் தெரியவில்லை. சீனர்கள் இதை பூ-நான் என்று அழைத்தனர். சற்று வடக்கிலுள்ள நாட்டில் பாரத தேசத்திலிருந்து வந்த

முதல் பாகம்

கம்புஸ்வாயம்புவன் ஓர் அரசை ஸ்தாபித்தான். இந்நாட்டிற்கு கம்புஜம் (Kambuja or Combodia) என்ற பெயர் வந்தது. ஆறாம் நூற்றாண்டில் இரு நாடுகளும் இணைந்தன. சுமார் பதினான்காம் நூற்றாண்டு வரை இந்தியாவிலிருந்து பல இனத்தவரும் - வேதியர், க்ஷத்திரியர், சிற்பிகள், வியாபாரிகள் - இங்கு குடியேறி நாட்டு மக்களுடன் கூடிக் கலந்து பாரதப் பண்பாட்டையும் சமயங்களையும் பரப்பினார். அக்காலத்தில் சைவம், வைணவம், பௌத்தம் முதலிய மதங்கள் பரவியிருந்தன. சைவமோ பெரும்பாலும் சிவாத்வைதம்; பாஞ்சராத்திரமும் வழக்கிலிருந்தது. இங்குள்ள கல்வெட்டுகள் தூய ஸம்ஸ்க்ருதத்திலும், மக்களின் சொல்லாகிய க்மேரிலும் (Khmer) பொறிக்கப்பட்டிருக்கின்றன. ஸம்ஸ்க்ருதப் பகுதியில் நூற்றுக்கணக்கான சுலோகங்களைக் காணலாம். சாஸனங்களின் துவக்கத்திலுள்ள மங்கள சுலோகங்கள் ஸ்தோத்திரங்களே. கி. பி. 968 முதல் 1001 வரை ஆண்ட ஐந்தாம் ஜயவர்மனின் சாஸனத்திலுள்ள இரண்டு சுலோகங்கள் இவை:

नमः शब्दगुणायास्त व्यतीनेन्द्रियवत्मने |
विश्वतो व्यश्नुवानाय व्योमरूपाय शम्भवे ||१||
उन्मना या सती कान्ता नितान्तशिवसङ्गता |
जगद्धिताय चाशास्तु सा शक्तिरचलात्मजा ||२||
நம: ஶப்^{3}த^{3}கு^{3}ணாயாஸ்த வ்யதீனேந்த்^{3}ரியவத்மனே |
விஶ்வதோ வ்யஶ்னுவானாய வ்யோமரூபாய ஶம்ப^{4}வே ||1||
உன்மனா யா ஸதீ காந்தா நிதாந்தஶிவஸங்க^{3}தா |
ஜக^{3}த்^{3}விதாய சாஶாஸ்து ஸா ஶக்திரசலாத்மஜா ||2||

சப்தத்தை குணமாக உடையவரும் (வேத சப்ததால் அறியத்தக்கவரும்), புலன்களுக்கு புலப்படாதவரும், எங்கும் பரவி நிற்கும் ஆகாயவடிவமான சம்புவுக்கு நமஸ்காரம். (1)

உன்மனா, ஸதீ, காந்தா என்று கூறப்படுபவளும். எப்பொழுதும் சிவனுடன் சேர்ந்திருப்பவளும், மலையரச குமாரியான அந்த சக்தியானவள் உலக நன்மைக்காக அருளட்டும். (2)

[சம்பு வேத (சப்த)ப் பொருள். சப்த என்ற பதம் பிரணவத்தையும், பரா, பஸ்யந்தீ, மத்யமா, வைகரீ என்னும் வாக்கின் பிரிவுகளையும் குறிக்கும். சம்பு இந்திரியங்களின் வெளிப்போக்கைத் தடுத்தவன் - புலன்களின் வழியில் அகப்படாதவன் - மஹாயோகி. ஆகாசரூபமாக ஸர்வத்தையும் வியாபிக்கிறவன். இந்த ஆகாசம் (வ்யோம) சிதாகாசம்; பூதாகாசமல்ல. அவன் சக்தியோ உன்மனி

முதல் பாகம்

(உன்மனா) பற்றற்று ஹ்ருதயகமலத்தில் தியானிக்கும் போது உள்ள நிலை உன்மனீபாவம் (த்ரிபுரோபநிஷத்)

निरस्तविषयासङ्गं सन्निरुद्धं मनो हृदि ।
यदायात्युन्मनीभावं तदा तत्परमं पदम् ॥
நிரஸ்தவிஷயாஸங்க³ ஸந்நிருத்³த⁴ம்’ மனோ ஹ்ரு’தி³ ।
யதா³யாத்யுன்மனீபா⁴வம்’ ததா³ தத்பரமம்’ பத³ம் ॥

இந்த நிலையில் தியானம், தியானிப்பவன், தியானிக்கப் படும் பொருள் என்ற மூன்றும் (த்ரிபுடி)நசிக்கும். இந்நிலையின் ஆனந்தம் உன்மனா. ஆக்ஞை (புருவமத்தியம்)க்கு மேல் பிரம்ம ரந்திரம்வரை உள்ள ஒன்பது ஸ்தானங்களில் எட்டாவது உன்மனீ. இங்கு யோகியின் தியானத்தில் நிர்விகல்பமாயும், நிரஞ்ஜனமாயும் சிவசக்தி காட்சியளிப்பாள். ஸித்தியும், ஸித்தியளிப்பவளும் உன்மனா. சிவத்துடன் பேதமற்றிருப்பவள் (சிவாபின்னா) அம்பாள் என்பதை ஸதீ, காந்தா, நிதாந்த சிவஸங்கதா என்ற சொற்கள் விளக்குகின்றன. ஸத்ரூபிணியாகையால் ஸதீ என்றும், கம் (பிரஹ்ம) ஸ்வரூபிணியாகையால் காந்தா என்றும் பாஸ்கரராயர் லலிதாஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் விவரணம் செய்திருக்கிறார். இந்த சுலோகங்கள் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கடல் கடந்த கம்புஜத்திலுள்ள ஓர் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளன. புராணம், உபநிஷத், யோக சாஸ்திரம், மந்திர சாஸ்திரம் இவைகளின் பல தத்துவங்கள் அடங்கியிருக்கின்றன].

மலர் 1 இதழ் 3

கடல் கடந்த ஸனாதன தர்மம். 4

(ஆசிரியர் ஸ்ரீ சங்கர க்ருபா ஸ்ரீ K R வெங்கடராமன்)

கம்புஜ நாட்டை ஏழாம் நூற்றாண்டின் பின்பகுதியில்ண்ட இரண்டாவது பவவர்மனின் சாஸனம் ஒன்றிலுள்ள சுலோகம் (கி. பி. 661) -

जयतीन्दु रवि व्योम वाय्वात्म क्ष्मा जलानलैः ।
तनोति तनुभिः शम्भुर्योऽष्टाभिरखिलं जगत् ॥
ஜயதீந்து³ ரவி வ்யோம வாய்வாத்ம க்ஷ்மா ஜலானலை: ।
தனோதி தனுபி⁴: ஶம்பு⁴ர்யோ(அ)ஷ்டாபி⁴ரகி²லம்’ ஜக³த் ॥

முதல் பாகம்

சந்திரன், ஸூர்யன், ஆகாயம்,காற்று, புருஷன், பூமி, தண்ணீர், தேஜஸ் என்னும் தன்னுடைய எட்டு சரீரங்களால் உலகெல்லாவற்றையும் ஆக்கி விரிவடையச் செய்யும் சம்பு மேன்மையுடன் விளங்குகிறார்.

பகவானுக்கு 'அஷ்ட மூர்த்தி' என்ற நாமம் பல புராணங்களில் சிறப்பிக்கப்பட்டிருக்கிறது. உதாஹரணமாக விஷ்ணு புராணத்தில்

सूर्यो जलं मही वह्निः वायुराकाश एव च |
दीक्षितो ब्राह्मणः सोम इत्यष्टौ मूर्तयो मताः ||
ஸூர்யோ ஜலம்’ மஹீ வஹ்னிः வாயுராகாஶ ஏவ ச |

தீ³க்ஷிதோ ப்³ராஹ்மணः ஸோம இத்யஷ்டௌ மூர்தயோ மதாः ||

(தீக்ஷிதனான பிராம்மணன் ஆத்மாவுக்குப் பதிலாக சொல்லப்பட்டிருக்கிறது.) கீதையில் பகவான்,

भूमिरापोऽनलो वायुः खं मनो बुद्धिरेव च |
अहंकार इतीयं मे भिन्ना प्रकृतिरष्टधा ||
பூ⁴மிராபோ(அ)னலோ வாயுः க²ம்’ மனோ புத்³தி⁴ரேவ ச |
அஹங்கார இதீயம்’ மே பி⁴ன்னா ப்ரக்ரு’திரஷ்டதா⁴ ||

என்று தெளிவுபடுத்தியிருக்கிறார். (மனதின் அதிதேவதை சந்திரன். புத்தி ஸூர்யனைக் குறிக்கும், அஹங்காரம் அவித்யையால் மூடப்பட்ட ஆத்மா.) மேலும்

यामाहुः सर्वभूत प्रकृतिरिति यया प्राणिनः प्राणवन्तः |
प्रत्यक्षाभिः प्रपन्नस्तनुभिरवतु वस्ताभिरष्टाभिरीशः ||
யாமாஹு³ः ஸர்வபூ⁴த ப்ரக்ரு’திரிதி யயா ப்ராணினः ப்ராணவந்தः |
ப்ரத்யக்ஷாபி⁴ः ப்ரபன்னஸ்தனுபி⁴ரவது வஸ்தாபி⁴ரஷ்டாபி⁴ரீஶः ||

என்று 'சாகுந்தல' நாடகத்தில் காளிதாஸ கவியும்,

முதல் பாகம்

भूरम्भांस्यनलोऽनिलोऽम्बरमहर्नाथो हिमांशुः पुमा-
नित्याभावि चराचरात्मकमिदं यस्यैव मूर्त्यष्टकम् ।

பூ^{4}ரம்பா^{4}ம்’ஸ்யனலோ(அ)னிலோ(அ)ம்ப^{3}ரமஹர்நாதோ^{2} ஹிமாம்’ஶு: புமா-
நித்யாபா^{4}வி சராசராத்மகமித^{3}ம்’ யஸ்யைவ மூர்த்யஷ்டகம் .

என்று 'தக்ஷிணாமூர்த்தி அஷ்டகத்தில் ஶ்ரீசங்கரபகவத்பாதரும் கூறியிருப்பது பிரஸித்தமே. அம்பாளுக்கும் ‘அஷ்டமூர்த்தி’ என்ற நாமம் ‘லலிதா ஸஹஸ்ரநாம’ த்தில் காணப்படுகிறது. மூககவியும் பூமி முதலிய தேவியின் மூர்த்திகளைப் பாடியிருக்கிறார். தமிழ் மறையிலும் இதைக் காணலாம் —

இருநிலனாய் தீயாகி நீரும் ஆகி
இயமனாய் எரியும், காற்றும் ஆகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாசமாய் அட்ட மூர்த்தியாகி
.....
.....
.....
புன்சடையடிகள் நின்றவாரே.
- அப்பர் (திருப்புகலூர் பதிகம்)

நிலம் நீர் நெருப்பு உயிர் நீள் விசும்பு நிலாப்பகலோன்
புலன் ஆய மைந்தனோடு எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்
-மாணிக்கவாசகர் (திருவாசகம்; திருத்தோள் நோக்கம்)

வைணவ மறையிலும் -
ஐந்து பூதமாய் இரண்டு சுடராய் அருவாகி
நாக மேறி நடுக்கடலுள் துயின்ற நாராயணனே.
-நம்மாழ்வார் (திருவாய்மொழி 4-8-8)

நம் நாட்டில் தொன்மொழிகளாகிய வடமொழியிலும் தென்மொழியிலும் போற்றப்பட்ட ஸித்தாந்தத்தை கடல் கடந்த கம்புஜத்தில் தூய கீர்வாண மொழியில் பதின்மூன்ற நூற்றாண்டுகளுக்கு முன் காண்பது விந்தையே!




முதல் பாகம்

'அஷ்ட மூர்த்தி' என்று பரமனைப்போற்றுவது **सच्चत्यच्चाभवत** **ஸச்சத்யச்சாப⁴வத** என்ற தைத்திரீய சுருதி வாக்கியத்திலன் விவரணமே.

மலர் 1 இதழ் 4

Our Website link : https://voiceofjagadguru.com/voj/

Telegram Channel : https://t.me/voiceofjagadguru

Instagram Channel : https://www.instagram.com/stories/voice_of_jagadguru_voj/3601249542534134684?igsh=MW90YW13N2c5b2hqaA==

WhatsApp Community Channel: https://chat.whatsapp.com/Ly4wlaTu8Kc3sjjEYU8KGu

YouTube Channel : https://youtube.com/@jagad-guru-channel?si=brkLFqiz8sZJ6UIl

Facebook link : https://www.facebook.com/share/1Du5xkve4e/

Our Mail ID : Info@voiceofjagadguru.com

Editorial Board		
Sri P A Murali	Hon' Advisor	Administrator & CEO, Sri Sringeri Mutt & It's Properties, Sringeri
Sri S N Krishnamurthy	Hon' Editor	Sri Sringeri Mutt, Sringeri
Sri Tangirala Shiva Kumara Sharma	Hon' Editor	Sri Sringeri Mutt, Sringeri
PujyaSri Swami Guruparananda	Hon' Editor	Founder Poornalaya, Chennai and Mentor Sri Swami Chidbhavananda Ashram, Vedapuri, Teni
Sri B Vijay Anand	Web Director	Coimbatore
Smt. B Srimathi Veeramani	Web Asst. Director & Chief Editor	Tirunelveli